Reg. No. M. 1482.

ஸமரஸ போதினி.

The "Samarasabodhini"-A Tamil Weekly

Published in Tanjore, devoted to Politics, Education, Industry, Agriculture & Village improvement etc.,

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

இ. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., Editor.

புத்தகம் 1. } ரௌத்ரி௵ புரட்டாசிமீ எ௳ புதன்கிழமை 22nd Sep. 1920. தஞ்சாவூர். { பிரதி 15.

ஸமரஸ போதினி.

சந்தா விவரம்:-

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ	5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ	3—0—0
பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ	7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ	4—0—0
தனிப் பிரதி விலை	ரூ	0—2—0

விளம்பர விகிதம்:-

பத்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ	20—0—0
4 insertions per month per column	Rs.	20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.



Kerosine Gas Stoves.
கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனாம்.

கோரனுஸ்ட்வ் நே. 5. ரூ 14-0-0.

ஷன் கம்பெனி, தஞ்சாவூர்.

"The Young India."

A high class English weekly edited by Mahatma Ghandi. Only Rupees five per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.

The Manager, **Young India**.
Ahmedabad.

INDIA'S FREEDOM WAS ALWAYS BOUND UP WITH THE ADOPTION OF SWADESHI

(Ghandi.)

THEREFORE.

LOVE.

PATRONIZE SWADESHI. YOU CAN GET WHAT YOU WANT AT

ORIENTAL WAREHOUSE.
AIYENKADAI STREET.
TANJORE.

The place Where Most People Trade, Where Goods Are Cheap. Watch our Advertisment Call & See.

O-R-I-E-N-T-A-L-W-A-R-E H-O-U-S-E.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைவில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக் குறிப்பு, அந்நிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

சர்வஜன மித்திரன்.

வாரம் இருமுறை புதன் சனிக்கிழமைகளில் வெளிவரும்.

நீர்வளம் நிலவள மலிந்த பினங்கின் கண் வதிவாவும் நமது இந்திய வாசிகளின் முன்னேற்றத்தையும் கல்வியபிவிருத்தியையும் உள்ளத்திலூன்றி அன்னவர்கள் பாஷாபிமானம் ஜனாபிமானம் மதாபிமானம்பூண்டு சமூக வாழ்வில் நற்பெயரெய்தவும் அரசாங்க வர்க்கத்தினர் பால் விசுவாசம் படைத்தொழுகவும் உலகின் கண் ஆங்காங்கு நடைபெறும் சமாச்சாரங்களை எளிதிலுணரவும் வேதம், வைதீகம், வேதாந்தம், சித்தாந்தம் சாஸ்திர ஞானங்களையும் எனைய நாட்டின் சம்பவங்களையும் அங்கத்திலேந்தி வெளியுலாவ மகுடத்தில் காணும் நாமம்புனைந்த தமிழ் பத்திரிகை அச்சிடப்பட்டு வருகிறது. இப்பத்திரிகையை யாவரும் ஆதரிப்பார்களாக.

சந்தா விவரம்.

உள்ளூர் சந்தா.		வெளியூர் சந்தா.	
வருஷம் 1-க்கு	S10 00	வருஷம் 1-க்கு	S15 00
6-மாதத்திற்கு	5 50	6-மாதத்திற்கு	8 00
3-மாதத்திற்கு	3 00	3-மாதத்திற்கு	4 50
1-மாதத்திற்கு	1 00	1-மாதத்திற்கு	1 50
தனிப்பிரதி 15-காசு		தனிப்பிரதி 18-காசு.	

கு. அ அசன் முகைய்யதீன்,
மானேஜர், சர்வஜன மித்திரன்,
97. பினங் ஸ்திரீட், பினங்கு.

ஹிதாயத்துல் இஸ்லாம்.

இப்பத்திரிகை ஜாதிவித்தியாச மில்லாமல் எல்லாமார்க்கங்களையும் கல்வியையும் வியாபாரத்தையும் இராஜாங்க சட்டத்தையும் பொது ஜன காரியங்களையும் தைரியமாய்ப்பயமில்லாமல் எடுத்துப் பேசும். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை எடுத்துக் காண்பிக்கும். வாரம் 10,000 கப்பிகள் வெளியாகின்றன. வருஷ சந்தா ரூ 5-0-0 சிங்கப்பூர் பினங்கு ரூ 7-7-0. முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி. பி. இல்லை.

விலாசம்:—(நைசாம்)

டாக்டர் H.H. மவ்லானா சையத்ஹுசைனி,
69. டீன்ஸ் ரோடு கொழும்பு

கனவான்களின்
உயர்ந்த லீவர் வாட்சுகள்,

இந்த கெடியாரத்தின் பின்புறமுள்ளமூடியின் பேரில் வெகு அழகாய் சித்திரவேலை செய்யப் பட்டிருக்கிறது. நல்ல உறுதியுள்ள சாமான்களால்நீடித்து உழைக்கக் கூடியனவாய் தயாரிக்கப்பட்டவை. ரூ. 4-8-0 ரேடியம் 8 மூலை சில்ட்லெட் வாட்சு விலை ரூபா 7-0-0, ரேடியம் ரவுண்டு வாட்சு விலை ரூபா 6-0-0, ரேடியம் இல்லாத சாதா வாட்சு விலை ரூபா 5-0-0.

தைரியலக்ஷ்மி & கம்பெனி,
தபாற்பெட்டி 265, மதராஸ்.

பிளூபிளாக் இங்க் மாத்திரைகள்.

விலை சரலம், எழுதினால் அழியாதது. பிரகாசமுள்ளது. இங்கியில் திப்பி கிடையாது. ஒரு இங்க் பாட்டில் நிரம்ப இங்க் கரைக்க ஒரு மாத்திரை போதும். (தபால் கூலி பிரத்தியேகம்.)

எ. ச். பிரதர்ஸ் & கோ.
61, ராஜாநாபா கிருஷ்ண தெரு,
கல்கத்தா.

நாகரிகம் பெற்ற இந்தியர்களுடைய கோரிக்கைகளையும் அபிப்பிராயங்களையும் நாம் (பிரிட்டிஷார்) அசட்டைசெய்யவும் அருவருக்கவும்கூடாது:-வில்லியம் இவார்ட் கிளாட்ஸ்டன்.

"தாங்கள்"
நோயற்ற வாழ்வுடன்

சுக ஜீவியாய் ஜீவித்திருக்கவும், ஆயுள் விருத்தியையும் சந்தான சந்ததிகளையும் பெருக உண்டாகச் செய்யக்கூடிய

புத்தகம்,

தங்களுக்கு வேண்டுமானால் அரை அணாஸ்டாம்பு அனுப்பினால் இனாமாகவே அனுப்பிவைப்போம்.

ஹக்கீம் S. P. M.
அப்துல்கனிராவுத்தர்,
வலங்கைமான்,
தஞ்சை ஜில்லா

இனாம்! இனாம்!! இனாம்!!!

ஸமாஸபோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரமே
(செப்டம்பர் மாதம் 30-ந் தேதிக்குள் ஆர்டர் செய்வோருக்கு.)

இங்கிலாந்தில் பெயரெடுத்த "வாட்டர்மென்" பவுண்டன்பேனாவையொத்த ஒருபுதுமாதிரி "வேல்லஸ்லி" என்ற பெயருடன் ஒரு பேனா இப்பொழுதுதான் எமக்குவந்தது. இதன் விலையையும், அமைப்பையும் கவனித்தால் இதற்கு கொடுக்கும் விலை மிகவும் சொற்பமென்றே சொல்லலாம். இது 14 காரட்டு பொன்னிப்புடனும், மிக அழகாயும் ஷை பேனாவின் மூடிகளில் ஸ்குரு வைத்திருப்பதாயும், ஷை பேனாவை பாக்கெட்டில் எந்த மாதிரி போட்டாலும் இங்கிகொட்டாவண்ணம் செய்யப்பட்டிருக்கின்றது. இது இங்கிலாந்தில் எமக்கென்றேசெய்யப்பட்டவை. எமக்கு இந்த "வெல்லஸ்லி" பேனாக்கள்பிரதிதினமும் நூற்றுக்கணக்காய்செலவாகி வருகிறபடியால் தேவையுள்ளோர்சீக்கிரம்நமக்கு ஆர்டர்செய்துபெற்றுக்கொள்ளவும்

"வெல்லஸ்லி" பேனாக்களில் பல மாதிரிகள்.

வெல்லஸ்லி சேப்டி நெ. 11 இது வாட்டர்மென்ஸ் சேப்டி பவுண்டன் பேனாவை போலவேயிருக்கும் விலை ... ரூ. 4 8.
ஷை ,, 12 ... ... ,, 5 0.
ஷை ,, 206 சேப்டி செல்ப் பில்லர் இந்த பேனாவிற்கு இங்கிபோட வேண்டுமென்றால் ஷை பேனாவை இங்கிபுட்டியினுள் காட்டி பேனாவின்மேலுள்ள ஸ்பிரிங்கை தூக்கினால் பேனாவானது இங்கியை தானாகவே உட்கொள்ளும். ,, 5 8.

எமது விலாசம்:— "ஸமாஸபோதினி" சந்தாதாரருக்கு தபாற்கூலி இனாம்.

ஸ்டேஷனரி சப்ளை கம்பெனி, மதராஸ்,

நகைத் தொழிற்சாலை.

எங்களிடம் ஒரு தடவை வேலை கொடுத்துப் பாருங்கள். 30வருஷ அனுபோகம் பெற்றவர்கள். 1914வருஷம் மதுரையில் நடந்த கண்காக்ஷியில் மெட்ராஸ் கவர்னராகயிருந்த ம்ரக்ஷிமை தங்கிய பெண்ட்லண்டு பிரபு அவர்களால் சிலாக்கிக்கப் பெற்றது. ஒவ்வோரு நகையும் நமது சொந்தப்பார்வையில் செய்யக்கூடியது.

எங்களிடத்தில் செய்யக்கூடிய நகைகளுக்கு நங்களே உத்திரவாதம் இருப்போம்.

கு. கிருஷ்ணய்யர்
தங்கம் போன் நகைவிலை வியாபாரி
மால் வடம் போக்கி தெரு, மதுரை

மதுரை சிகப்புப் புட்டா சேலைகள்.

சிவப்பு ஒருபுள்ளிசேலை ரூ. 7-8; 3 புள்ளிசேலை ரூ. 7-12; 7 புள்ளிசேலை ரூ. 8; கருப்பு 1 புள்ளி சேலை ரூ. 8-4; 7 புள்ளிசேலை ரூ 8-12; இன்னும் டோரியா, சரிகை பட்டுதுப்பட்டாக்களும, சித்தாடைகளும், ரவிக்கைகளும், விலைக்குச் சரசமாய்கிடைக்கும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம்:—
கெமிகலர் டிரேடிங் கம்பெனி,
27, ஜடாமுனித்தெரு, மதுரை.

பல கண்காக்ஷிகளில் மேடல்கள்பெற்ற
அபூர்வ ஔஷதங்கள்.

பி: சுப்பராய் ஆயுர்வேத
ஔஷதசாலை.

ஸ்ரீ வேங்கடேசபெருமாள் கோவில்
சன்னதி, தஞ்சாவூர்.

1. தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதிமுடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாதுநஷ்டம், பலஹீனம், பசியின்மை, கண், கால் எரிவு, தேகவரக்ஷி, கை கால் இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேகவெள்ளை, வெட்டை, நீரழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களையும்போகும். சரீரபுஷ்டி, புருஷத்தன்மை, ஜீரணசக்தி, அபிரிமிதமான தாதுவிருத்தியையும் யுண்டாகும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

2. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த எப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரை யில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில அணா 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:—எந்த காரணத்தினால் உண்டாயிருக்கும மேகவெள்ளை, வெட்டை, நீர்குற்றல், நீர் தாரை எரிவு, சீழ் ரத்தம் வடிதல், முதலிய வியாதிகளையும் ஆண், பெண் இருதாரார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி, பி. சிலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாதொகைகளைக் காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். (ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

அறிவிப்பு.

மோகரம் பண்டிகையை முன்னிட்டு நாம் அச்சடிக்கும் அச்சாபீஸில். அச்சுக்கோப்பவர்கள் வேலைக்கு வராததால் இவ்வ ரப் பத்திரிகை அதன் குறித்த தினமாகிய புதன்கிழமையில் வெளிவரவில்லை. காலம்கழித்து வெளிபிட நேர்ந்ததற்கு விசனிக்கிறோம்.



"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's & Truth's"

ரௌத்ரி ஹூ புரட்டாசி மீ ௬ உ புதன்கிழமை.

22nd SEPTEMBER 1920.

குடிகளின் தர்மம்.

உலகம் முழுவதும் குழப்பத்திலிருந்து கொண்டு வருகிறது. பலவழிகளில் ஜனங்கள் துன்பமடைந்து வருகிறார்கள். அவர்கள்கஷ்டங்களும் அதிகரித்து வருகின்றன; இன்னது செய்வதென்று தெரியாமல் ஜனங்கள் ஏங்கி நிற்கிறார்கள். அரசாங்கத்தார்களும்மிகவும் கவலை கொண்டிருக்கிறார்கள். இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, சைனா. முதலிய தேசங்களின் நிலை பரிதாப கரமாயிருக்கிறது. எல்லாத் தேசங்களிலும் தொழிலாளர்களின் குறைகளை முன்னிட்டும் உணவுப் பொருள்கள் காரணமாகவும் பலமான போராட்டம் நடந்து கொண்டு வருகிறது. இது மட்டிலுமல்ல. பிரிட்டிஷாருக்குட்பட்டஎகிப்து, அயர்லாந்து இந்தியா முதலிய தேசங்களிலும் சிறிது காலமாக மெஸப்பொதேமியாவிலும்குழப்பமும் அமைதியின்மையும் அதிகரித்து வருகின்றன. இந்தியாவைப் பொறுத்த மட்டில் அமைதியின்மைக்குக் காரணம் பிரிடிஷ் அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சிமுறையே காரணமாகும். சிலர் அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சிமுறை நிர்வாகத்திறமை கொண்ட தென்றும் நல்லதென்றும்சொன்னாலும், இவ்வாட்சி முறையால் குடி ஜனங்கள் அதிருப்தியடைந்திருக்கிறார்களென்று பிரிட்டிஷ் அதிகாரிகளே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

பிரஜைகளுக்குத் திருப்தியையும் சுகத்தையும் உண்டு பண்ணவேண்டியது ராஜனின் தர்மம். கவிசிரேஷ்டராகிய வால்மீகிபகவான் ஸ்ரீமத்ராமாயணத்தில் "ராஜாஸத்யமென்றும், ராஜாதாவென்றும், பிதாவென்றும், ராஜாவானவன் ஜனங்களுக்கு ஹிதத்தையுண்டு பண்ணுகிறவனென்றும்" கூறியிருக்கிறார். இந்த அரியவாக்குப் படி ஆட்சிசெலுத்தப்பட்டு வந்தால் ராஜனுக்கு ஏதாகிலும் குறைகள் உண்டாகுமா? பிரஜைகளுக்குத் துன்பங்கள் நேரிடுமா? இந்தியாவில் 150 வருடமாகப் பிரிட்டிஷ் ஆட்சி முறையானது நடத்தப்பட்டு வந்தும், அதனால் இந்தியாவின் முன்னேற்றமும் இந்தியர்களின் அபிவிருத்தியும் போதுமான படி ஏற்படவில்லையென்றே நாம் கூற வேண்டியிருக்கிறது. சக்கிரவர்த்தியிடமிருந்து ஸ்ரீமுகம் பெற்று வரும் ராஜப்பிரதிநிதியும் சரி, கவர்னர்களும்சரி இந்தியாவின்நிலைமையையும் இந்தியர்களின் நோக்கங்களையும் நன்கு அறிந்தவர்களல்லர். அவர்கள் அதிகாரவர்க்கத்தினர்களின் மனப்பான்மைக்கு ஒத்தபடி ஆட்சி செய்கிறார்கள். அவர்கள் ஜனங்களோடு நெருங்கப் பழகாததினாலும் ஜனங்களின் குறைகள் இன்னவையென்று அறிந்து கொள்ளாததனாலுமே ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் அத்தியந்த சினேகபாவம் ஏற்படாமலிருக்கிறது. ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன் இந்தியாவிற்கு உத்தியோக தோரணையில் வந்த அதிகாரவர்க்கத்தினர்கள் ஜனங்களோடு கூடியவரையில் நெருங்கிப் பழகிச் சில நன்மைகளும் செய்தார்கள். அந்த நன்மைகளை இந்தியர்கள் இன்றைக்கும் மறவாமல் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தற்காலத்தில் இந்தியப் பிரஜைகளின் குறைகள் சொல்ல முடியா. இந்தியர்களுக்குச்சுதந்திரம் கிடையாது. ஜவாப்தாரியான ஆட்சியும இல்லை. ஜனங்களின் அபிப்பிராயத்திற்கு மதிப்பும் கிடையாது. பிரஜைகளின் புகார்களுக்கும் குறைகளுக்கும்போதுமானபடி பரிகாரங்களும் கிடையா. இந்தியர்களின் யோக்கியதைக்குத் தக்கபடி உத்தியோகங்களும் வழங்கப் படவில்லை. குடியேற்ற நாடுகளில் இந்தியர்கள் மனிதர்களாகப்பாவித்து நடத்தப்படுவதில்லை. அங்கு இந்தியர்களின் நிலையைப்பற்றி நாம் சொல்லத் தேவையில்லை.

நம் தேசமிருக்கும் நிலையில் இந்தியப் பிரஜைகளின் மனப்பான்மை எவ்விதமிருக்கிறதென்பதை நாம் சொல்லாமலே நேயர்கள் அறிவார்கள். இந்தச்சமயத்தில்பிரஜைகள் தங்கள் தர்மம் இன்ன தென்பதை அறிந்து கொள்ள வேண்டும். நமது பாரத நாட்டின் நாகரிகம் மிகவும்மேலானதென்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. இந்தியர்களின் லட்சியம் பாரமார்த்திகமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இந்தியர்கள் அஹிம்ஸா தர்மத்தைக் கைக்கொண்டவர்கள்; பொறுமையோடு கஷ்டங்களைச் சகித்து ஈசுவரனிடத்தில் பூரண பக்தி கொண்டு நமது ஜன்மாவை கழிக்க வேண்டு மென்பது தர்மசாஸ்திரங்களின் கருத்தென்பது யாவரும் அறிந்த தத்துவமாகும். மேலும் ஸத்யம்வத; தர்மம் சர; என்று நமதுவேதங்கள்கூறுகின்றன. சத்தியத்தைக் கடைப்பிடித்தால் எதையும் வெல்லலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கை ஒவ்வொரு மதத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில்வைத்துக்கொண்டு பிறருக்கு யாதொரு விதமான ஹிம்சையும் தீங்கும் செய்யக் கூடாது. எல்லோரையும் சகோதரர்களாகப் பாவிக்க வேண்டுமென்றும் அவர்களை நமக்குச்சமமாகக்கருத வேண்டுமென்றும் எல்லா மதங்களும் கூறுகின்றன. இந்தக் கொள்கையை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஒப்புக் கொள்வதில் மாத்திரம் பிரயோஜன மொன்றுமில்லை.

இக்கொள்கைகளை நாம் அனுஷ்டானத்திற்குக்கொண்டுவர வேண்டும். இதுசாதாரணகாரியமல்ல. இக்கொள்கைப்படி நடக்கவேண்டு மென்று கூறுவது வெகு சுலபம். இதன் படி நடத்திக் காட்டுவது மிகவும் சிரமம். இது அப்பியாஸத்தின் பேரில் தான் கைகூடும். நமக்கேற்படும்கஷ்டங்களைச்சகித்துக் கொள்ள வேண்டுமென்றால், நாம் பொறுமை யோடிருக்க வேண்டும். பொறுமை என்பது தான் தன்னடக்கம். நமக்கு ஆத்திரம் அதிகரித்த பொழுது நம்மை நாம் மறந்து விடக்கூடாது. அந்த ஆத்திரத்திற்கு இடம் கொடுத்து விட்டால் சொல்ல முடியாத விபரீதங்கள் விளைந்து விடும். ஆகையால் தான் நாம் அந்த ஆத்திரத்தை அடக்கவேண்டுமென்றுவற்புறுத்துகிறோம். நாம் அதை அடக்க அடக்க நம்முள் சாந்த குணம் மேலிடும். மனம் சாந்தியை அடைந்தால் அமைமியின்மைக்கு இடமிராது. அப்பொழுது தான் ஈசுவரன் நம்மை அனுக்ரகிப்பார்.

நம் கஷ்டங்கள் ஒழிந்து போகவேண்டுமானல் நம் முள்ளிருக்கும் அகந்தையை அடியோடு அகற்ற வேண்டும். "நான்வேறு நீவேறு" என்னும் வேற்றுமை புத்தி ஒழிய வேண்டும். அப்பொழுதான் நம்முள் ஒற்றுமை அபிவிருத்தியாகும். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஒற்றுமையோடு உழைத்தால் நாம் கோரிய தர்மம் சுலபமாக நிறைவேறிவிடும்.

இடை நிலை விளக்கு.

வேறு வழியில்லை.

"இந்தியாவின் பரிதாப நிலையையும். குடியேற்ற நாடுகளில் இந்தியர்கள் அனுபவிக்கும் துயரங்களையும் கவனிக்கும் போது எகிப்தைப் போல் இந்தியாவுக்குப் பூரண சுய ஆட்சி வேண்டுமென்று கேட்பதை விட தன் மதிப்புள்ள இந்தியர்களுக்கு வேறுவழியில்லை" யென்று கிறிஸ்துவின் உண்மைச் சிஷ்யரான ரெவரண்டு ஆன்ட்ரூஸ் பகிரங்கம் செய்திருக்கிறார். இவர் கூறியதை ஒவ்வோர் இந்தியரும் அறியவேண்டுகிறோம்.

மிஸ்டர் ஆன்ட்ரூஸ் முன் பின்யோசனையில்லாமல் கூறுபவரல்லர். இந்தியர்கள் அனுபவிக்கும் கோடிகஷ்டங்களுக்கும் அவமரியாதைகளுக்கும்' பூரண சுதந்தர மொன்றே தக்கமருந்தாகும். இம்மருந்தையே இந்தியர்கள் கோரி நிற்கிறார்கள். பிரிட்டிஷ் குடிமக்கள் காலப்போக்கை யனுசரித்து எகிப்துக்கு வழங்கப்பட்டிருப்பது போல் இந்தியாவுக்கும் பூரண சுதந்திரம் வழங்கித்தேசத்தில்சமாதானத்தை நிலைநிறுத்திவைப்பது விவேகமாகும்.

சுதந்தரமணம்

நேற்று முன் தினம் வந்த செய்தியால் பிரிட்டிஷாருக்கும் எகிப்து தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் முன்னர் பேசிமுடிந்த நகல் உடன் படிக்கையை ஆதாரமாகவைத்துக் கொண்டு அசல் உடன் படிக்கை செய்யலாமென்று எகிப்து தேசியமகாசபையார் சம்மதம் கொடுத்து விட்டதாகக் கேட்டுச் சந்தோஷமடைகிறோம். முதன் முதல் நகல் உடன் படிக்கை வெளியான காலத்தில் அநேகர் "எது இது முடியப்போகிறதா" என்று சந்தேகம் கொண்டனர். இப்போது இவர்களுடைய சந்தேகத்திற்கிடமில்லாமற்போய் விட்டது. அசல் உடன் படிக்கையை முடிவில் எகிப்து தேசிய மகாசபையினர் அங்கீகாரம் செய்த பிறகே அது அமுலுக்குக் கொண்டுவரப்படுமென்று அறிவிக்கப் படுகிறது. இனிமேல் எகிப்து சுதந்தரக் கொடி தாங்கிக்கிழக்கு ஆசியாவில் வீசி நிற்கும். எகிப்தியர்களும் தலைநிமிர்ந்து நடப்பார்கள். உலகத்தார்களும் அவர்களுக்கு மரியாதை செய்வார்கள். எகிப்துவிடுதலைபெற்றதுபற்றி நாம் அகமகிழ்கிறோம். எகிப்தைப் போல் சுதந்தரமணத்தை இந்தியர்கள் என்று தான் நுகர்வார்களோ?

அடுத்த வைசிராய்

பொதுவாக வதந்திகளுக்கு உயிருமில்லை; உடலுமில்லை; காலுமில்லை கையுமில்லையென்று ஜனங்கள் சொல்லுவார்கள். சில சமயங்களில் வதந்திகளுக்கு உயிரிருப்பது போல் உலவுகின்றன. லார்ட்செம்ஸ் போர்டுக்குப் பிறகு அடுத்த வைசிராயாக யார் வருவரோ? வென்று இந்தியர்கள் ஆவலாக எதிர்பார்க்கிறார்கள். அடுத்த வைசிராயாக ஒருவர் நியமிக்கப்பட்டாகி விட்டதென்றும், அவர் இன்னாரென்பதை அதிகாரிகள் அறிவார்களென்றும், அவர் பெயர் அறிவிக்கப்பட்டவுடன் ஜனங்கள் அதைக்கேட்டுஆச்சரியமடைவார்களென்றும்சிலபத்திரிகைகள் அறிவிக்கின்றன. இவ்வதந்திகள் எவ்வளவு தூரம் உண்மையோ? நாமறியோம். கர்லமிருக்கும் நிலையைக் கவனித்து வரப்போகும் வைசிராய் எகிப்துக்கு வழங்கப்பட்டிருப்பது போல் இந்தியாவுக்கும் பூரண சுயஆட்சி கொடுக்கப்படவேண்டுவது அவசியமும் நியாயமுமாகுமென்று பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குச் சிபார்சு செய்யக்கூடிய வராயிருந்தால் நலம். ஒருகால் இராணுவபலத்தை நம்பி ஆட்சி செய்யலாமென்று மூடநம்பிக்கையுடைய ஒருவர் நியமிக்கப் பட்டால், அந்த நியமனத்தால் இந்தியர்கள் திருப்தியடையமாட்டார் களென்று மாத்திரம் கூறத் துணிகிறோம்.

'ஹிந்துப் பத்திரிகையின் மாறுதல்'

விசேஷ காங்கரஸுக்குப் பிறகு சென்னை 'இந்து'ப் பத்திரிகை நடத்தப்படுவதன் தோரணையை "நியு இந்தியா" பின் வருமாறு எழுதுகிறது:—

இம்மாதம் 18ந் தேதி ஹிந்துப் பத்திரிகை தன் தலையங்கத்தில் அரசியல் யுத்தம் தொடங்குவதற்கு முன்பு வேண்டிய முன்னணிவேலைகள் செய்யப் படவேண்டுமென்றும் சாதாரணஜனங்களின் மனோ நிலையை அறிவதோடு அவர்கள் எவ்வளவு தூரம் முன்வரக்கூடுமென்பதையும் நன்றாகக்கவனித்து வேண்டிய பரிகாரங்களை ஆபத்தமாய்ச் செய்து வைத்துக் கொள்ளவேண்டு மென்றும் எழுதியிருப்பதன் கருத்து என்ன? வென்று 'நியு இந்தியா' கேட்கிறது அதுஇத்துடன் நிற்கவில்லை. ஹிந்துப் பத்திரிகை கூறும் வாதம் இந்தியர்கள் இன்னும் சுய ஆட்சிக்குத் தகுதியுடையவர்களல்லரென்று அதிகாரவர்க்கத்தினர்கள் சொல்லும் வாத மல்லவா? சென்ற வருஷம் அரசியல் காரியங்கள்மெதுவாகச் செய்யப்பட வேண்டுமென்றுமிதவாதிகள் கூறியதற்கும்இப்போது "இந்து" எழுதுவதற்கும் என்ன வித்தியாசம்? "இந்து" பத்திரிகை மித வாதத்தை மிகப்பொறுமையாக எழுதுவதால், மிதவாதிகள் தங்களுக்கென் ஒரு தினப்பத்திரிகையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டு மென்ற எண்ணத்தை அகற்றிவிடலாமென்றும் இந்துப் பத்திரிகையைத் தங்களுடைய பத்திரிகையாக வைத்துக் கொள்ளலாமென்றும்பொருள்பட மிகத்தெளிவாக எழுதியிருக்கிறது. "நியுஇந்தியா" பத்திரிகைக்கு எழுதிய ஒருநிருபர் ஹிந்துப் பத்திரிகையின் அரசியல் தோற்றத்தில் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டிருப்பதை ஒருவரும் மறுக்க முடியாதென்று குறிப்பிட்டிருக்கிறார்.

என்ன பாதகம்?

தேசத்தில் அமைதியும் சமாதானமும் எப்பொழுதும் நிலவவேண்டுமென்று லாட் செம்ஸ்போர்டு எவ்வளவு கவலையும்பரபரப்பும் கொள்கின்றனரோ அவ்வளவு கவலையும் பரபரப்பும் இந்தியத்தலைவர்கள் கொள்ளாமலில்லை. முக்கியமாகக் கனம் சாஸ்திரியார்தேசக்ஷேமத்தில் லார்ட் செம்ஸ் போர்டை விட அதிக கவலை கொண்டிருக்கிறாரென்று சொல்வதில் தோஷமில்லை. ஏதோ அவிலை நினைத்து உரலை இடிப்பது போல், லாட்செம்ஸ் போர்டு கனம் சாஸ்திரியார் கொண்டு வந்தபஞ்சாப்தீர்மானங்கள் சட்டசபையில்வாதிக்கப்பட்டால்பொது ஜன க்ஷேமத்திற்கு ஹானி ஏற்படுமென்று சட்ட சபையின் 7-வது விதிகளின்படி அவைகளைச் சட்டசபைமுன்பு கொண்டு வரக்கூடாதென்று தடுத்து விட்டார். இவர் இவ்வாறுதடுத்து விட்டதுபெரிய தவறிலும் தவறாகுமென்று இந்தியப் பத்திரிகைகள் கூக்குரலிடுகின்றன. இஃதொருபுறமிருக்க, இவரது செய்கையினால் தேசத்தில் அமைதியேற்படுமா? அமைதியின்மை உண்டாகுமா? வென நாம் அறிய விரும்புகிறோம். லார்ட்செம்ஸ்போர்டின் செய்கையினால் ஒத்துழையாமைக்கு உபபல மேற்பட்டிருப்பதை யார் அறியமாட்டார்கள்? பஞ்சாப் தீர்மானங்கள் வாதிக்கப் பட்டால் என்ன பாதகமுண்டாகும்

சோதனையானகாலம்

முஸ்லிம்களுக்குத்தற்சமயம் சோதனையான காலமென்றே நாம்கூறத்துணிகிறோம். கிலாபத் விஷயம் திருப்திகரமாக முடிவு செய்யப் படாமலிருப்பதனால், முஸ்லிம்களின் மனம் ஏற்கெனவே புண்பட்டிருக்கிறதென்பதை நேயர்கள் அறிவார்கள். இந்நிலையில் லாகூரில் பிரசுரமாகும் ஜமீன்தார் பத்திரிகையின் ஆசிரியரான மௌலவிஜாபர் அலிகான் அரெஸ்டு செய்யப்பட்டுவிசாரணை செய்யப் பட்டு வருகிறார். இவர் அராஜக உபந்நியாசங்கள் செய்தன ரென்று குற்றம் சாட்டப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. இவர் எந்த விதமான அராஜகப்பிரசங்கம் புரிந்தனரோ? ஒன்றும் அறிவிக்கப் படவில்லை.

என்ன சொல்லுகிறார்?

"கௌரவப்பட்டங்களைப் பெற்றவுடன் ஒருவன்கவர்ன்மெண்டிற்கு அடிமையாகிவிடுகிறான்" என்று அடிக்கடி சொல்லக்கேட்டிருக்கிறோம். கௌரவப் பட்டங்களைப்பற்றி மிஸ்டர் எர்ட்லி நார்ட்டன் என்ன சொல்லுகிறாரென்று கவனிப்போம். பீகார்மாகாணக்காங்கரஸ்கமிட்டிக்கு எழுதிய ஒருகடிதத்தில்மிஸ்டர்நார்ட்டன் "கௌரவப்பட்டங்கள் உங்கள்நாட்டுஜனங்களையும்(இந்தியர்கள்)எங்கள்நாட்டுவாசிகளையும் (பிரிட்டிஷார்)கெடுத்துப் போட்டன. ஆகையால் ஒவ்வொரு காங்கரஸ் வாதியும் எந்தக்காரணத்தைமுன்னிட்டும் கவர்ன்மெண்டினிடமிருந்து பட்டங்கள் பெறுவதில்லை யென்று ஒரு விரதமெடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் கவர்ன்மெண்டினிடம் உத்தியோகம் பெறுவதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லமாட்டேன். இந்தியர்களுடைய க்ஷேமத்திற்காக இந்தியர்கள்உயர்தரஉத்தியோகங்களிலிருக்கவேண்டுவதுஅவசியம்' என்றுகுறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு இவர்காங்கரஸ் வாதிகளுக்கு அறிவுறுத்தியதற்கு நாம் சந்தோஷப்படுகிறோம். இவரதுயோசனையை காங்கரஸ் வாதிகளென்று சொல்லிக்கொள்வோர்களெல்லோரும் அனுஷ்டித்தால் மிகவும் நலமாயிருக்கும். ஆனால் அவர்கள் இவ்வாறு செய்வார்களோவென்று அஞ்சுகிறோம்

அடுத்த வியாழக்கிழமை 30ந்தேதி தஞ்சையிலுள்ள ஆரியகான சபையார் திலகர் ஞாபக நிதிக்குச் சுலோசனா சதி என்னும் திவ்ய நாடகத்தை நடத்திப் பண உதவி செய்வார்கள். திலகரபிமானிகளெல்லோரும் இந்த நாடகத்திற்கு விஜயம் செய்து ஆனந்திப்பார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது.

உலக அரசியல் நிலை.

தீர்க்கதரிசி எழுதுகிறார்.

உலக நிலையைப்பற்றி நான் என்ன சொல்வேன்? பரிதாபம்! பரிதாபம்!! உலகம் கொந்தளிப்புக்கடலில்தத்தளித்துத் தடுமாறி நிலை கலங்கி எங்கும் ஒரே குழப்பத்திலிருக்கிறது. சமாதானமென்பதில்லை. அன்றாடம் வரும் தந்திச் செய்திகள் உலகத்தின் பயங்கரமான நிலைமை அறிவிக்கின்றன. 1914-ம் வருஷ முதல் உலகம் இவ்வாறிருப்பதற்குக் காரணமென்னவென்று ஒரு பெரியோரை அணுகிக்கேட்டேன். அவர் சொல்லிய காரணத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நீங்கள் என்னை பைத்தியக்காரனென்று அழைத்தாலும் அழையுங்கள். அவர் சொல்லிய காரணம் உண்மையாயிருக்கலாமெனறு என் தீர்க்க தரிசினத்திற்குப் புலப்படுகிறது. தேவலோகத்தில் தேவாசுர யுத்தம் 1914 முதல் நடந்துவருவதாகவும் அதனுடைய அதிர்ச்சியால் இம் மண்ணுலகில் யுத்தம் நடைபெற்று வருவதாகவும் சொன்னார். தேவலோகத்திற்கும் இம் மண்ணுலகத்திற்கும் ஒருவிதமான சம்பந்தமிருக்கிறதென்பதை நீங்கள் அறிவீர்கள். என்ன சம்பந்தமிருக்கிறதென்று கேட்டால் அதை இச்சமயம் இந்த விடத்தில் சொல்ல முடியவில்லையே யென்று விசனிக்கிறேன். சம்பந்தமிருக்கிறதென்று ஒப்புக்கொள்வோர்கள் நான் மேலே கூறிய காரணம்உண்மையாயிருக்கலாமென்று நம்புவார்கள். அதுவும் உலக வாழ்க்கையில் உலகாயதக் கொள்கையே பிரதானமென்றிருப்பவர்களுக்கு என்ன சொன்னாலும் அவர்களுடைய புத்திக்கு எட்டாதென்பதை நான் திட்டமாகச்சொல்லுவேன். இஃதொருபுறமிருக்க, தேவாசுர யுத்தம் நின்று அங்குச் சமாதானமேற்படுவதற்கு இன்னும் சுமார் மூன்று அல்லது மூன்றரை வருஷங்கள் செல்லலாமென்று தெரிகிறது. அதுவரையில் உலகத்தில் சமாதானம் நிலைத்திருப்பது சிரமமென்று தான் சொல்லவேணடும். சர்வ தேசச் சங்கம் இப்போது காய்ந்து போனாலும் அதனால் கொஞ்சம் நன்மைகள் பின்னர் ஏற்படலாமென்று என் தரிசினத்திற்குத் தோன்றுகிறது.

பயங்கரமான நிலை.

நம் நேயர்கள் அன்றாடம் அயல் நாட்டுத் தந்திச் செய்திகளை ஊன்றிப்படிக்கிறார்களோ? என்னவோ? இந்தியாவில் ஒற்றுமையாமைப் பலப்பட்டு ஜனங்கள் மனதில் வேரூன்றும் போது, அவர்கள் உலக நிலைமை எங்குக் கவனிக்கப் போகிறார்கள்? சீனாவில் பஞ்சம் கொஞ்ச நஞ்சமல்ல. பயங்கரமான பஞ்சம் தோன்றியிருக்கிறது. இக்தக் கூத்தில் அங்கு இராணுவக் கொழுப்புடையவர்கள் அரசாங்கத்தை நிராகரித்துப் பல அக்கிரமச் செயல்களை இழைத்து வருகிறார்கள். பர்ஷியா துருக்கி ஸ்தானம் முதலிய விடங்களில் போல்ஷிவிக்கர்களின் கொட்டம் பெருங்கொட்டமாயிருக்கிறது. ஆப்கானிஸ்தானம் எந்த நிமிஷம் போல்ஷிவிக்கர்களின் பெருவாய்க்குள் அகப்பட்டுவிடுமோ வென்ற சந்தேகம் நீங்கியபாடில்லை. பிரிட்டிஷாருக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் சினேக உடன்படிக்கை ஏற்பட்டிருந்தாலும் போல்ஷிவிக்கர்களின் வேகத்தை ஆப்கன் அமீர் எதிர்க்கமுடியுமா? வென்று ஒரு கேள்வி கேட்கப்படுகிறது.

மெஸப்பொதேமியா சொல்லவேண்டுவதில்லை. பிரிட்டிஷாரின் நல்லெண்ணம் ஒருபுறமிருந்தாலும், அராபியர்கள் பிரிட்டிஷாரை நம்பவில்லை. அராபியர்கள் பிரிட்டிஷாரோடு துணை நின்று துருக்கியோடு சண்டையிட்டார்கள். தாங்கள் செய்த உதவிக்குப் பிரிட்டிஷார் பக்கபலமாக நின்று சுயேச்சாதிபத்தியம் பெருவதற்குச் சாதகமாகவிருக்கவேண்டுமேயொழிய தங்களுக்குஅவர்கள் எஜமானர்களாக வரக்கூடாதென்று அராபியர்கள் ஆட்சேபிக்கிறார்கள். மெஸப்பொத்தேமியாமுழுவதும்குழப்ப மேற்பட்டு பிரிட்டிஷ் படைகள் தாக்கப்படுகின்றன. பிரிட்டிஷார் தாங்கள் செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்துவருகிறார்கள். அங்குள்ள பிரிட்டிஷ்ஸ்திரீ புருஷர்களும் குழந்தைகளும் ஆபத்திலிருக்கிறார்கள்.

போல்ஷ்விக்கர்களின் வேலை.

போல்ஷிவிக்கர்கள் ஒரு தடவை ஓய்ந்த பிறகு மற்றொரு முறை போலந்தின்மீது படையெடுக்க பிரமாதமான முயற்சிகள் செய்து வருகிறார்கள். ஜெர்மானியர்களுடைய உதவியைப்போல்ஷிவிக்கர்கள் பெற்று "வெட்டு ஒன்று துண்டு இரண்டு" என்ற உறுதியுடன் போலந்தின் மீது படையெடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இதாலியின் கதி நிர்க்கதியாகவிருக்கிறதென்று சொல்லலாம். இசாலியன் கவர்ன்மெண்ட் என்ன செய்யமுடியும்? அங்குப் பெரிய உள்நாட்டுக் குழப்பமேற்பட்டு ஊர் ஜனங்களைக் கிடுகிடுவென்று ஆட்டிவைக்கிறது. கவர்ன்மெண்ட் இருந்தும் இராமலிருப்பதும் ஒன்றாகத்தானிருக்கிறது. தொழிலாளர்கள் பெரிய தொழிற்சாலைகளைக் கைவசப்படுத்திக்கொண்டு எஜமானர்களை விரட்டிவிட்டார்கள். தற்சமயம் இதாலியில் ஏற்பட்டிருக்கும் இயக்கத்திற்குப் பலர் பலவிதமாகப் பெயரிட்டு அழைக்கின்றனர். அது கேவலம் போல்ஷிவிக்கர்களின் இயக்கமாகும். இதாலியின் கவர்ன்மெணட் இனி என்னதான் செய்யப்போகிறதோ? பார்க்க வேண்டும்.

ருஷ்யாவின் நிலையைப்பற்றி எவ்வளவு விரித்துச்சொன்னாலும் சொல்லி மாளாது; எழுதியும் முடியாது. சுருக்கமாக அங்குத் போல்ஷிவிக்கர்களின் பயங்கரமான ஆட்சியே அமுலிலிருக்கிறது.

ஜெர்மெனியும் பிரான்ஸும் தத்தம் உள்நாட்டு விவகாரங்களைக் கவனித்து வந்தாலும் அந்த நாடுகளிலும் அதிருப்தியும் அமைதியின்மையும் மேலோங்கி வருகின்றன. ஜெர்மெனி யுத்தத்திற்கு முன்பிருந்த தன் நிலையை அடைய முயற்சிகள் செய்கிறது. பிரான்ஸில் குடியரசு பிரஸிடெண்ட் ஸ்தானம் காலியாகிவிடும் தருணத்திலிருக்கிறது. அந்த ஸ்தானத்திற்குப் போட்டி ஆஸாமிகள் நிற்கிறார்கள்.

இங்கிலாந்தின் கதி.

கடைசியாக இங்கிலாந்தின் நிலை எந்த நிமிஷம் எப்படி மாறுமோ வென்று அரசதந்திரிகள் பயந்து கிடக்கிறார்கள். அயர்லாந்தில் உள்நாட்டுக் கலகம் தடபுடலாயிருக்கிறது. ஐரிஷ் ஜனங்களெல்லோரும் தனிக் குடியரசாட்சி வேண்டுமென்று ஒரே உறுதியாயிருக்கிறார்கள். பிரிட்டிஷார் அயர்லாந்து ஜனங்களின் விருப்பத்திற்கு இணங்க மனமில்லாமலிருக்கிறார்கள். முரட்டு பலத்தை உபயோகித்தேனும் ஐரிஷ் ஜனங்களை அடக்கி ஆட்சி புரியவேண்டுமென்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் ஓலமிடுகின்றன. இஃதொருபுறமிருக்க, பிரிட்டிஷ் தொழிலாளர்கள் ஊர்ஜிதமாயிருக்கிறார்கள். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்கும் தொழிற் கட்சியினருக்கும் ஒரு பெரிய போராட்டம் ஏற்பட்டிருக்கிறது. சுரங்கக்காரர்கள் சங்கத்தார் வெகு ஒற்றுமையாக வேலை செய்து வேலை நிறுத்தம் செய்வோமென்று கவர்ன்மெண்டாருக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். சுரங்கக்காரர்கள் சுரங்கங்களைக்கவர்ன்மெண்டாரே நிர்வகித்து அதன்லாபத்தை ஜனங்கள்அடையவேண்டுமென்றுகவர்ன்மெண்டாரை வற்புறுத்துகிறார்கள். சொந்தக்காரர்கள் சுரங்கக்காரர்களின் இஷ்டத்தைப்பூர்த்தி செய்ய முடியாதென்றிருக்கிறார்கள். சுரங்கத் தொழில்களிலிருந்து 660 லட்சம் பவுன் கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தைக் கவர்ன்மெண்டார் தானேஉபயோகித்துக்கொள்ளப் பார்க்கின்றனர். சுரங்கக்காரர்கள் இதற்கு இஷ்டப்படவில்லை. தொழிலாளர்களும் பொது ஜனங்களும் இத்தொகையை உபயோகிக்க வேண்டுமென்று சுரங்கக்காரர்கள் பகிரங்கம் செய்கிறார்கள். இவர்களுக்குத் துணையாகப்போக்குவரவுதொழிலாளர்களும், மின்சாரத் தொழிலாளர்களும் ரெயில்வே தொழிலாளர்களும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். இவர்களுடைய ஒற்றுமையைக் கண்டு அச்சங்கொண்டு லண்டன் "டைம்ஸ் பத்திரிகை" "இவர்கள் வேலை நிறுத்தம் செய்தால் தேசத்தில் பெரிய அனர்த்தம் ஏற்படுமென்றும், இதன் முடிவு என்னவாகுமென்று சொல்லமுடியாதென்றும்" குறிப்பிட்டிருக்கிறது. ஒரு சமயம் வேலை நிறுத்தம் செய்தால் ஜெனரல் எலக்ஷன் ஏற்படுமென்று ஊகிக்கப்படுகிறது. ஜெனரல் எலக்ஷன் உண்டானால், இப்போதுள்ள கவர்ன்மெண்ட் போய்விடும். தொழிலாளர் கவர்ன்மெண்ட் ஒன்று ஏற்படும். அப்போது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நிர்வாக முறை அடியோடு மாறிவிடும். இந்தச் சமயத்தில் அயர்லாந்து இந்தியா [illegible] லிய தேசங்களுக்குக் கதி மோ[illegible] குமென்று சொல்லப்படுகி[illegible]

பிரிட்டிஷ் தொ[illegible] கு எந்த வழியில்[illegible] த்தவாரம் [illegible]

கொரியர்கள்

சுதந்தரயுத்தம் செய்கிறார்கள்.

மிஸ்டர் எப். ஏ. மக்கன்ஸிஎன்னும் சுதந்தர ஆங்கிலேயர் "கொரியர்களின் சுதந்தரயுத்தம்" என்னுமொரு புஸ்தகம் எழுதியுள்ளார். இதை ஸிம்கி மார்ஷல் கம்பெனியார் பிரசுரித்திருக்கின்றனர் இப்புஸ்தகத்தில் கொரியர்களின் துயரமும் அவர்கள் பரிதாப நிலையும் நன்கு விவகரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை, நேயர்கள் அறியவேண்டி, நாம் கீழே குறிப்பிடுகிறோம்:—

கொரியா என்பது ஒரு சிறிய நாடு இந்த நாட்டில் 200 லட்சம் கொரியர்களிருக்கிறார்கள். இவர்கள் புத்திசாலிகள்; சுறுசுறுப்புடையவர்கள்; உழைப்பாளிகள்; சாந்தசுபாவமுடையவர்கள். இவர்களுக்கு அந்நியர்களுடைய ஆதிக்கம் பிடிக்காது வெகுகாலம் வரையில் தங்கள் நாட்டு விஷயத்தில் அந்நியர்கள் தலையிடுதல் கூடாதென்றிருந்தார்கள். கடைசியாக அமெரிக்கா ஐரோப்பா வல்லரசுகள் முதலியவைகளின் பலவந்தத்தின் பேரில் கொரியர்கள் சர்வதேசச்சம்பந்தம்வைத்துக் கொண்டார்கள். கொரியாவின் ஏதேச்சாதிபத்தியத்தை வல்லரசுகள் மதித்துவந்தன.

தலைவர்களின் துரோகச் செயல்

நாளடைவில் கொரியாவின் ராஜ்ய நிர்வாகம் சரியாகச் செய்யப்படாததால் பல நிர்வாக ஊழல்கள் கொரியாவின் முன்னேற்றத்துக்கு இடையூறுகளாயிருந்து வந்தன. அதன் தலைவர்கள் ஒருவர்க்கொருவர் சண்டை செய்து கொண்டு தேசநிர்வாக காரியங்களை அலட்சியம் செய்து வந்தார்கள். தம் தாய் நாட்டிற்கு விரோதமாகத் துரோக காரியங்களையும் செய்பவரானார்கள். இவர்களுடைய துரோகச் செயல்களினால் என்னவாயிற்று? ராஜ்யம் க்ஷீணமடையத்தலைப்பட்டது. சத்துருக்களுடைய சூழ்ச்சிகள் அதிகமாயின. ஆசியாக்கண்டத்தில் கொரியா, ராஜ்யத்தைச் சேர்க்கும் ஒரு வல்லரசுக்கு மத்தியஸ்தானமாகவும் முக்கியஸ்தானமாகவுமிருக்கிறது. இந்தத்தேசத்தைக்கைப்பற்றவேண்டுமென்று ஜப்பான் பல நூற்றாண்டுகளாகக்குறிவைத்திருந்தது. ஜப்பானோடுபோட்டி போட்டுக்கொண்டு ருஷ்யாவும் சீனாவும் கொரியாவைப் பிடுங்கச் சூழ்ச்சிகள் செய்தன. சீனா ஒரு வருஷம் வரையில் கொரியாவுக்குமேலதிகாரியாயிருந்தது. திடீரென்று பல காரணங்களை முன்னிட்டுயுத்தமுண்டாகவே, ஜப்பான் சீனாவையும் பிறகு ருஷ்யாவையும் தோற்கடித்துவிட்டது. பிறகு கொரியாவில் ஜப்பான் சொன்னது சட்ட [illegible] ...வுடைய சூழ்ச்சி [illegible] வசமாக்கிய போது, கொரியர்கள் சும்மாவிருக்கவில்லை. நாடெங்கும் கூக்குரலிட்டு ஜப்பான் ஆட்சி கூடாதென்று பறையடித்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை ஜப்பான் இஷ்டம்போல் ஆட்சிசெய்து கொரியர்களைத் திருப்திசெய்ய அகடவிகடவிநோதங்களைப்புரிந்தது. என்ன செய்தும் கொரியர்கள் திருப்திபடையவில்லை. கொரியர்களுடைய ஜாதித்தன்மை இல்லாமலே செய்து அவர்களும் ஜப்பானியர்களாகி விடவேண்டுமென்று ஜப்பானியர்கள் வெகு முயற்சிகள் செய்து வருவதாக மிஸ்டர்மெக்கன்ஸிதம்புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். 1906ம் வருஷத்தில் செல்வாக்குள்ள ஜப்பானியர் ஒருவர் மிஸ்டர் மெக்கன்ஸிக்குப் பின் வருமாறு கூறியதாக அந்தப்புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"கொரியாவில் எங்களுடைய (ஜப்பானுடைய) நோக்கமொன்றுதான் ஆனால் அந்த நோக்கம் நிறைவேற பல தலை முறைகள்செல்லும். அந்த நோக்கமென்ன வென்றால் கொரியர்களும் ஜப்பானியர்களாகி விடவேண்டுமென்பதே. கொரியர்கள் எங்களுடைய பாஷையைப் பேசி எங்களோடு கூடி வாழ்ந்து நாங்கள் வேறு அவர்கள் வேறு என்ற வித்தியாசமில்லாமலிருப்பதற்கு என்ன மார்க்கங்களுண்டோ அந்த வழிகளைச்செய்துவருகிறோம். நீங்கள் (பிரிட்டிஷார்) அந்நியர்களாகவேஇருந்துகுடிபேற்றநாடுகளில் (இந்தியாவும் உள்பட) ஆட்சிசெய்வது போல நாங்கள் செய்யமாட்டோம். நாங்கள் வேறு கொரியர்கள் வேறு என்று வித்தியாசமேற்படாமல்செய்து ஆட்சிபுரிவதே ஜப்பான் கவர்ன்மெண்டின் நோக்கம்'

இவ்வாறான கொள்கையுடன் ஜப்பான் கொரியாவைக் கடந்த 16 வருஷங்களாக ஆட்சிபுரிந்து வந்தாலும், அதன் நோக்கம் இம்மியளவுகூட நிறைவேறவில்லை. கொரியர்கள் ஒரே பிடிவாதமாய் ஜப்பானின் முயற்சிகளை எதிர்த்துவந்திருக்கிறார்கள். ஜப்பான் கவர்ன்மெண்டார் கொரியர்களுடைய நடை உடைபாவனைகள் கூட மாற வேண்டுமென்றும் அவர்கள் ஜப்பானியர்களைப் போல் உடைகள் தரிக்கவேண்டுமென்றும் கட்டாயம் செய்திருக்கின்றனர். கொரியர்களுடைய சுதந்தரம் பல வழிகளில் பறிமுதல் செய்யப்பட்டதென்றும் மிஸ்டர் மெக்கன்ஸி தம்புஸ்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

கோரியர்களின் சுதந்தரம்.

கொரியர்கள் சும்மாவிருக்கவில்லை. சுதந்தரப் போராட்டம்செய்து, ஜப்பான் ஆட்சிமுறையைக் கண்டித்துக் கொரியர்களைத் தட்டி எழுப்பி வந்தார்கள். உலக யுத்த மேற்பட்டவுடன் பிரிஸிடெண்ட் வில்சனின் 14 கொள்கைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு கொரியர்கள் தனிக்குடியரசு கவர்ன்மெண்டொன்றை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்த முயற்சி கொரியர்களெல்லோரையும் ஒன்று செய்து விட்டது. ஜப்பானியர்கள் கொரியர்களின் முயற்சிகளை அடக்கி ஆட்சிசெய்துவருகிறார்கள். இன்னும் வெகு காலம் வரையில் கொரியா ஜப்பானை மீறி ஒரு காரியமும் செய்யாதென்று தெரிகிறது. கொரியாவுக்கும் ஜப்பானுக்கும் பொதுவாக நின்று அமெரிக்கா நியாயம் தீர்க்குமென்று கொரியர்கள் எதிர்பார்த்தார்கள். எல்லாம் வியர்த்தமாகி விட்டனவென்றும் ஆனால் கொரியர்கள் சுதந்தரத்துக்காகப் போராடுகிறார்களென்றும் "ஜான் ஒ'லண்டன்வீக்லி" என்னும் பத்திரிகை எழுதுகிறது.

சுமார் 60000 சவுக்கு மரங்கள் கீழ்நிலமுள்பட ஏலம்.

தஞ்சாவூர் டிஸ்டிரிக்டு கோர்ட்டு 1920ஸு I. P. 19-நெ. ஷெடியூலைச் சேர்ந்ததும் மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்குப் போகும் ரோட்டில் நான்காவது மைலில் அடுத்த கீழ்புரம் உள்ள திருப்பாலக்குடி வட்டத்தை சேர்ந்த புஞ்சையில் 8, 10, வருஷங்களுக்கு முன் பயிர் செய்து இப்போது பல அளவு மரங்களாயிருக்கிற சுமார் அறுபதினாயிரம் சவுக்கு மரங்களை கீழ்நிலமுள்பட அடுத்த அக்டோபர்மீ 17ந்தேதி ஞாயிற்றுக்கிழமைபகல் 12மணிக்கு ஆரம்பித்து மன்னார்குடி டவுன் கோபாலசமுத்திரம் தெருவீதி 23 நெம்பர் வீட்டுத் திண்ணையில் பகிரங்கமாய் ஏலம் போடப்படும். ஏலம் கேட்கும் முன்னுக்கு ரூ 100 டிபாசிட் கட்டியும் ஏலம் எடுத்த உடன் எடுத்த கிரயத்தில் காலில் ஒரு பங்கை செலுத்தி ரசீது பெத்துக்கொண்டும். அது முதல் ஒரு மாதத்துக்குள் பாக்கித் தொகையை செலுத்தி தன் சிலவில் சாசனம் பெற்றுக் கொள்ளுகிறது என்ற ஏற்பாட்டின் பேரில் ஏலம் போடப்படும்.

மற்ற நிபந்தனைகள் முதலிய விபரத்துக்கும் ஜாகாவை போய் பார்க்கவேண்டிய வசதிக்கும் அடியில் கையொப்பமிட்டவருக்கு தெரிவித்ததின்பேரில் எல்லா விதத்திலும் வேண்டிய சவுகரியத்துக்கு ஏற்பாடு செய்யப்படும்.

காடல்ரோடு, தஞ்சாவூர், 22-9-20.

T. கோதண்டராமய்யங்கார்,
ஐகோர்ட்டு வக்கீல்,
ஸ்பெஷல் ரிசீவர்.

திருவாரூர்தென்னிந்தியாஆலைக்காரர்கள் சங்கத்தின் ஆதரவின் கீழ் சென்னைச் சட்டசபைக்கு தெரிந்தெடுக்கும் விஷயமாய் தஞ்சையில் அக்டோபர் 3ந்தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 3 மணிக்கு ஒரு கூட்டம் கூடும்.

* *

தஞ்சாவூர் ஜில்லா ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் சங்கத்தின் ஆதரவின் கீழ் ஒரு மகாநாடு 1920 ஸு அக்டோபர் மீ 23, 24 தேதிகளில் கும்பகோணத்தில் நடைபெறும். அது சமயம் ஜில்லா போர்டு அக்கிராசனர் கனம் V. K. ராமானுஜாச் சாரியார் அவர்கள் அக்கிராசனம் வகிப்பார்.

தஞ்சை ஜில்லாவிலுள்ள போர்டு முனிஸிபல் உபாத்தியாயர்களுடைய குறைகளைப் பற்றியும், உதவி பாடசாலைகளின் குறைகளைப்பற்றியும், பல தீர்மானங்கள் செய்யப்படும். வரவேற்புக் கூட்ட அங்கத்தினர்களுக்கு நபர் 1-க்கு 2 ரூ. பிரதிநிதிகளுக்கு நபர் 1-க்கு 1 ரூ விகிதமும் கட்டணம் செலுத்த வேண்டும். இது வெகு முக்கியமான மகாநாடு ஆகையால் எல்லாப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களும், மானேஜர்களும் வந்திருந்து கான்பரன்ஸை நடத்தவேண்டி வேண்டப் படுகிறார்கள்

விசேஷ காங்கரஸ்

என்ன கற்பிக்கிறது?

நல்ல பாடங்கள்.

எப்பொழுதும் ஒரு தேசத்து ஜனங்கள் தங்கள் வாழ்க்கையின் லட்சியத்தை யடைய முன் செல்லும்போது, அவ்வப்போது எங்கேனும் யாரிடமிருந்தேனும் நல்ல வழிகளையும் பாடங்களையும் கற்றுக்கொண்டு மென்மையாக எல்லோரும் கொண்டாடும்படி நடந்துகொள்ளவேண்டுவது அவசியமென்று இதாலியின் தேசபக்தரான பெரியோர் ஜோசப் மாஜினி என்பவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இவ்வரிய வாக்கு என்றைக்கும் எந்தத் தேசத்திற்கும் பொருந்தும். தற்சமயம் இந்தியர்கள் சுதந்தர தாகமெடுத்துத் தீவிர புத்தியுடன் சுயராஜ்யத்தை யடையத் தீர்மானித்திருக்கும் தறுவாயில் அவர்கள் சமீபத்தில் கூடிய விசேஷ காங்கரஸிலிருந்து சில நல்ல பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. அவைகளை அக்கிராசனர் முடிவுரையினின்று நம் சகோதரர்கள் படிக்கவேண்டி, நாம் குறிப்பிடுகிறோம்:-

* *

ஒரு மனிதன் செய்த காரியம் பொது ஜன அபிப்பிராயத்திற்கு மாறாக விருந்தாலும் அல்லது அவன் கொள்கை தேச முற்போக்குக்குத் தடையாயிருக்குமென்று கருதினாலும் நீங்கள் (ஜனங்களைப்பார்த்து) அவன் காரியத்தையும் கொள்கையையும் கண்டிக்கவேண்டுமேயன்றி அவனது குலம் கோத்திரத்தைக் குறிப்பிட்டு இழிவாகப் பேசுதல் அருவருக்கத் தகுந்ததாகும்.

* *

ஒருகால் நீங்கள் உங்களை மறந்து வாய்தவறி கூறிவிட்டால் அதைஉடனே கௌரவமாக வாபீஸ் வாங்கிக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்வது தான் பெருந்தன்மை.

* *

உங்களபிப்பிராயத்திற்கொவ்வாதவர் ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் பேசும்போது அவரைப் பேசவிடாமல் செய்து கைதட்டிப் பரிகாசம் செய்வது இழிவான காரியமாகும்.

* *

உதாரணமாக மிதவாதிகளில் சிலர் காங்கரஸ் மகா சபைக்கு வராமலிருப்பதற்கு உங்களுடைய நடத்தையே காரணமாயிருக்குமென்று இப்பொழுது ஒருவாறு ஊகிக்கிறேன். நீங்கள் (தேசியக் கட்சியினர்) உங்கள் நடத்தையைச் சீர்படுத்திக்கொள்ளவேண்டும். காந்தியடிகளின் அபிப்பிராயத்துக்கு ஒத்துப் போகாத தேசியக்கட்சித் தலைவர்கள் இனி நடைபெறும் காங்கரஸ் கூட்டங்களில் மிதவாதிகள் நடத்தப்படுவது போல ஏன் நடத்தப்படமாட்டார்கள்.? மிதவாதிகள் காங்கரஸுக்கு வரவில்லையென்று அவர்களை அடியோடு குற்றம் சாட்டுதல் கூடாது.

* *

நான் என் ஹிருதயத்திலிருந்து உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் உங்களுடைய நடத்தையைச் சீர்படுத்திக்கொள்ளாவிடில், காங்கரஸ் ஒரு கட்சியாரின் சங்கமாகிவிடும். அது இருந்த விடம் தெரியாமலும் போய்விடும்.

* *

காங்கரஸ் மகா சபை தேசிய சபையாகும். காங்கரஸினிடமிருந்துவருகிற தேசியத் தன்மையைக் குறைப்பதற்கு நீங்கள்ஒரு காரியம் செய்யக்கூடாது. மெஜாரிடி கட்சியினர் காங்கரஸ் நிர்வாக காரியங்களைப் பார்த்து வரலாம். மைனாரிடி கட்சியினர் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்துக்கொள்ள இடம் கொடுக்கவேண்டும்

* *

காங்கரஸ் சபைக்கு மதிப்பில்லாமல் செய்து அதை ஒரு கட்சியாரின் சபையாகச் செய்யுங்காலம் இந்தியாவின் துர்பாக்கியமான காலமாகும். ஆதலால் நீங்கள் உங்கள் குணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

* *

கடைசியாக இந்திய தேசம் தன் ஸ்வரூபத்தை உணர்ந்துவிட்டது. தன் நிலையை அறிந்துவிட்டது. தேச க்ஷேம காரியங்களைத் தேசத்தினர்கள் செய்யவேண்டும்.

* *

காங்கரஸ் மகா சபை மூலமாக வழங்கப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள் தங்களைத் திருப்தி செய்யாவென்று ஜனங்கள் உணர்ந்துகொண்டது சந்தோஷமாகும்.

* *

தேச நிர்வாக அதிகாரம் இந்தியர்கள் கையில் இல்லாமலிருக்கும்போது தேசியப் படிப்பைப் பற்றிப் பேசுவது வீணாகும். முதன் முதலில் அதிகாரத்தைப் பெறவேண்டும். ஆனால், தற்காலம் கற்றுக்கொடுக்கப்படும் படிப்பில் அடிமைத் தன்மையிருக்கிறதென்று மகாத்மா காந்தி சொல்வதில் உண்மையில்லாமற் போகவில்லை.

* *

சட்டசபையில் ஒருவிதமான விஷமிருக்கிறது. இந்தியர்கள் சட்டசபைக்குச் சென்றவுடன் அது அவர்களைக் கெடுத்துவிடுகிறதென்று மகாத்மா காந்தி சொல்லுவது சரியேயாகும். தேசபக்தர்களாயிருந்த என் நண்பர்களில் பலர் சட்டசபைக்குச் சென்றவுடன் அவர்களுடைய தேசபக்தியும் தேசியக் கொள்கையும் குன்றிவிட்டதை நான் கண்ணாரப் பார்த்திருக்கிறேன்.

* *

மகாத்மா காந்தியடிகள் இந்தியாவின் மூலதனம்.

* *

கிலாபத் விஷயமும் பஞ்சாப் விஷயமும் இந்தியர்களைத் தட்டி எழுப்பிவிட்டன. இந்து முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்திவிட்டன இந்திய ஜனங்கள் தங்கள் நிலையை விழித்துப் பார்க்கும்படி செய்துவிட்டன.

* *

இந்தியர்களின் நிலையைப்பற்றியும் குறைகளைப்பற்றியும் தெரிவிக்க இங்கிலாந்துக்குப் போவதில் பயனொன்றுமில்லை. இது என் அனுபவம். கெஞ்சிக் கேட்கும் குணம் எனக்குப் பிடிக்கவில்லை.

* *

ஆனால் ஒரு விஷயம். இந்திய விஷயம் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் முதலிய தேசங்களில் பகிரங்கம் செய்யப்படவேண்டுவதன் அவசியத்தை நீங்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

* *

காங்கரஸ் மகா சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி காங்கரஸ் காரர்கள் செய்கையில் அனுஷ்டித்துக் காட்டவேண்டும். தீர்மானம் செய்துவிட்டு ஒற்றுழையாமைவிஷயத்தில் மௌனம் சாதித்துவந்தால், நான் அவர்களைத் தேசத் துரோகிகளென்று அழைப்பேன்.

* *

ஒற்றுழையாமைக்காரர் படுக்கையினின்று எழுந்தது முதல் மறுபடியும் இரவில் படுக்கைக்குப் போகும் வரை ஒற்றுழையாமை விஷயத்திற்கு என்ன செய்திருக்கிறோமென்று யோசித்துப் பார்க்கட்டும். வீண் பேச்சுக்காரர்களென்றும், பொய்யர்களென்றும் டம்பக்காரர்களென்றும் உலகமழைக்காமல் நீங்கள் நடந்து கொள்ளுங்கள்.

* *

இஸ்லாம் பெருமையைக் காப்பாற்றவேண்டுமானால் முஸ்லிம்கள் உண்மையாக இஸ்லாத்தின் பிரகாரம் நடக்கவேண்டும். இஸ்லாத்தின் பெருமையைக் காப்பாற்ற முடியாமற் போனால் அவர்கள் கடவுளுக்கும் மனிதனுக்கும் ஜவாப்தாரியாவார்கள்.

* *

ஒற்றுழையாமை விஷயத்தில் முஸ்லிம்கள் முன் சென்று வழி காட்டவேண்டும். இந்துக்கள் முஸ்லிம்களைப் பின்பற்றவேண்டும்.

* *

காங்கிரஸில் பிளவுண்டாகக்கூடாது. அப்படி ஏற்பட்டால் எனக்கு வருத்தமாயிருக்கும். காங்கரஸ் எல்லாமனிதர்களுக்கும் பொதுவானது. யாரும் வரலாம். வந்து பேசலாம். நீங்கள் மெஜாரிடியாயிருப்பதனால் மைனாரிடியைப் பேசவிடாமல் செயவது கூடாது. பிரிந்துபோயிருக்கிற மிதவாதிகளை அழையுங்கள். இந்தியா தற்காலமிருக்கும் நிலையில் எல்லோருடைய உதவியையும் யோசனையையும் வேண்டி நிற்கிறது.

ஐக்கிய நாணய ஸெண்டரல்

பாங்கு

இம்மாதம் 14ந்தேதி மாலை தஞ்சாவூர் பெஸன்ட் லாட்ஜில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் அக்கிராசனம் வகித்தார். இதன் முக்கிய நோக்கம் தஞ்சாவூர் ஜில்லா ஜனங்களின் சௌகரியத்தை உத்தேசித்துக் கும்பகோணத்திலிருக்கும் ஐக்கிய நாணய ஸெண்டரல் பாங்கைத் தவிர மற்றொரு பாங்கு தஞ்சாவூரில் ஏற்படுத்தப்பட வேண்டு மென்பதாகும். அக்கிராசனர் இந்தப் பாங்கியினாலுண்டாகும் நன்மைகளை விரித்துரைத்தார். பிறகு கூட்டுறவுச் சங்க ரிஜிஸ்டிரார் அவர்கள் ஏற்படுத்தப்படவிருக்கும் பாங்கின் உபயோகத்தையும், அதனால் ஜனங்கள் அடையும் நன்மைகளையும் விளக்கினார்.

மிஸ்டர் டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் தஞ்சாவூரில் ஐக்கிய நாணய கூட்டுறவு பாங்கு ஏற்படுத்தப்பட்டு ரிஜிஸ்தர் செய்யப்பட வேண்டுமென்றும், ஆரம்பத்தில் 4 லட்சம் ரூபா சேர்க்கபபட வேண்டுமென்றும், ஜனங்கள் இதற்கு உதவிசெய்ய வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தவுடன் அது எல்லோராலும் நிறைவேற்றப்பட்டது. அங்கேயே சுமார் ஐயாயிரம் ரூபங்குத் தொகைக்கு வசூலானது. மேற்கண்ட பாங்கின்விவரங்களை, நேயர்கள் அறியவேண்டி, நாம் கீழேவெளியிடுகிறோம்.

(அடுத்த பகம் பார்க)

பிரகடனப் பத்திரிகை.

1. இப்பொழுது தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள ஐக்கிய சங்கங்களுக்கெல்லாம் கும்பகோணத்திலிருக்கும் தஞ்சாவூர் ஜில்லா கோவாப்ரேட்டிவ் ஸெண்ட்ரல் பாங்கு பண உதவி செய்து வருகிறது. சென்ற 2, 3 வருஷங்களாய் ஐக்கியமுறை அபிவிருத்தியை அனுசரித்து இன்னுமொரு ஸெண்ட்ரல் பாங்கு இந்த ஜில்லாவில் ஸ்தாபிக்கப்பட வேண்டியதவசியமென்று ஏற்பட்டிருக்கிறது.

2. தஞ்சாவூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை அரந்தாங்கி, இந்த நாலு தாலுகாவிலுள்ள சங்கங்களுக்கு மட்டில் உதவும்படி ஒரு ஸெண்ட்ரல் பாங்கிங் யூனியன் தஞ்சாவூர் சூபிரவைஸிங் யூனியன் பிரரேபணையின் பேரில் ஸ்தாபிக்கப்படுகிறது.

3. கும்பகோணத்திலிருக்கும் ஜில்லாபாங்கு இவ்விதம் தஞ்சாவூரில் பிரத்தியேகமாய் பாங்கு வைப்பதற்கும் அதற்கேற்ற விதம் தனது எல்லையைக் குறைத்துக் கொள்வதற்கும் தனக்கும் மேற்சொல்லிய தாலுகாக்களிலுள்ள சங்கங்களுக்கும் ஏற்பட்டுள்ள லேவாதேவியைப் பூராகவும் புதிய பாங்குக்கு மாற்றிவிடுவதற்கும் அனுமதி கொடுத்திருக்கிறது.

4. புதிய பாங்கிங் யூனியன் விவரங்கள்:—

1. மூலதனம்:—ரூ 2 லட்சம். ரூ 50 உள்ள 4000. பங்குகள் அடங்கியது. இதில் 2000 பங்குகள் ஷை தாலுகாக்களிலுள்ள சங்கங்களுக்கெடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.

2. 18 வயதுக்கு மேற்பட்ட யெவரும் மெம்பராகச் சேரலாம். அவர் எங்கு வஸிப்பவராயினும் இருக்கலாம்.

3. எந்த மெம்பரும் ஒரு பங்காவது யெடுக்கவேணும். 100 பங்குகளுக்கு மேற்படாமல் எவ்வளவு பங்காணாலும் எடுக்கலாம்.

4. ஒவ்வொரு பங்குக்குள்ள ரூ 50யும் பங்குக்கேட்க்கும்போதே கட்டலாம்; அல்லது அப்ளிகேஷனுடன் குறைந்தது பங்கு 1க்கு ரூ 10ம் பங்கு கொடுத்தவுடன் ரூ 10ம்செலுத்தவேண்டும். பாக்கி ரூ 30யும் குறைந்தது மும்மூன்று மாத இடைவெளியுள்ள மூன்று தவணைகளில் டைரக்டர்கள் அபேக்ஷிக்கும்போது செலுத்தவேண்டும். தவணைக்கு முன்னமேயே கட்டும் பங்குத் தொகைக்கும் அதற்குள்ள பூரா ஈவுங்கிடைக்கும்.

5. பங்குத் தொகைக்கு 100-க்கு ரூ ஒன்பது வரையில் ஈவு கொடுக்கப்படும்.

6. பங்கு ஈவுக்கு இன்கம்டாக்ஸ் வரி இல்லை; ஸ்டாம்புகட்டணம் இல்லை.

7. பங்கு 1க்கு ரூ ஒன்று பிரவேசக்கட்டணம் அப்ளிக்கேஷனுடன் செலுத்த வேண்டும்.

8. டிபாஸிட்டுக்கு வட்டி 100க்கு ரூ 7 வரையில் கொடுக்கப்படும்.

9. மெம்பர்களின் டிபாஸிட்டுகள் முதன்மையாய் ஏற்றுக்கொள்ளப்படும்.

10. டிபாஸிட்டுக்கு ஜாமீன் பேரில் மெம்பர்களுக்குக் கடன் கொடுக்கப்படும்.

11. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் யெல்லா வகுப்பினரும் இதில் மெம்பர்களாகச் சேரலாம். டிபாஸிட்டும் செய்யலாம்.

12. நிர்வாக ஸபையில் தற்காலம் நபர் மெம்பர்களின் பிரதிநிதிகள ஐந்துபேர்.

13. இந்த பாங்கின் நடவடிக்கைகளைக் கவர்ன்மெண்டார் மேற்பார்வையும் தணிக்கையும் செய்வதுடன் வருஷாந்தத் தணிக்கை உத்திரவை கெஜட்டில் பிரசாம் செய்வார்கள்.

14. கவர்ன்மெண்டார் லோகல் பண்டு முனிஸிபல் கண்டிராக்டர்களுடைய ஜாமீன் டிபாஸிட்டுத் தொகைகளை இவ்வித பாங்கியில் டிபாஸிட்டு செய்ய அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

பங்கு வேண்டியவர்கள் அப்ளிகேஷன்பாரத்தைத்தருவித்துப் பூர்த்திசெய்து பங்கு 1க்குகுறைந்தது ரூபாய் பத்தும் பிரவேசக்கட்டணம் ரூ ஒன்றும் ஆக ரூ. 11 வீதம் தஞ்சாவூர் கோவாபரேடிவ் சூபர்வைஸிங்யூனியன்காரியதரிசி மகா-ா-ஸ்ரீ T. R. ஸ்ரீனிவாஸ ஐயங்கார் அவர்களுக்கு அனுப்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புது நகரம் கிலாபத் மகா நாடு.

ஒரு நிருபர் எழுதுகிறார்.

புது நகரம் மலபார் ஜில்லாவிலுள்ளது. இதில் ஏராளமாய் வசிப்பவர்கள் முகமதிய சகோதரர்களாவார்கள். இம்மாதம் 12ந் தேதி மேற்கண்ட ஊரில் கிலாபத் மகா நாடு கூடியது. கோயமுத்தூர் கிலாபத் கமிட்டியின் பிரசிடெண்டும் லேபர் யூனியன் வைஸ் பிரசிடெண்டுமான ஜனாப் M. முகமது சுல்த்தான் சாஹிப் அவர்கள் பிரரேபணை செய்தார். ஜனாப் வெள்ளையப்பர் ராவுத்தர் அவர்கள் ஆமோதித்தார் ஜனாப் முகமது சுல்தான் சாஹிப் அவர்கள் அக்கிராசனம் வகித்துப் பேசியதாவது:—

அக்கிராசனரின் பேச்சு

நமது இஸ்லாத்திற்கு விரோதமாய் நேச தேசத்தார்கள் உடன் படிக்கை செய்துள்ளார்கள். பிரிட்டிஷ் மந்திரிகளும் தங்கள் வாக்குறுதிக்கு மாறாக நடக்க ஆரம்பித்து விட்டார்கள். இஸ்லாத்தின் தர்மங்களைப் பாது காக்கும் வகையில் திருத்தியமைத்தாலன்றி நாம் சமாதானமாய் வாழ முடியாது. நமது கோரிக்கையை அவர்கள் புறக்கணித்தே வருவதால், நமது உதவியையும், விசுவாசத்தையும் அநியாயமாய் இழந்து விடுகிறார்களே என்று நான் வருத்தப் படுகிறேன். காங்கிரஸ் மகா சபையானது ஒத்துழையாமைத் திட்டத்தை நிறைவேற்றி விட்டதிலிருந்து தேசத்தின் நிலைமை எப்படியிருக்கிறதென்று பிரிட்டிஷார் உணர்ந்திருப்பார்களென்று நினைக்கின்றேன். மத்திய கிலாபத் கமிட்டியார் செய்து வரும் யோசனைகளையும் கிளர்ச்சியையும் விடா முயற்சியுடன் என்ன தியாகம் வேண்டுமானாலும் செய்து அக்கமிட்டியாரை கடைசி வரை நாம் ஆதரிக்க வேண்டும். கிலாபத் கிளர்ச்சியின் விஷயமாய் பிரிட்டிஷார் வெறி கொள்ளாது முஸ்லிம்களின் நியாய உணர்ச்சியை மதித்துப்புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்களாக. முஸ்லிம்களும் இந்துக்களிடத்தும், பாரத நாட்டினிடத்தும் விசுவாசமுள்ளவர்களாய் சத்தியத்திற்கும் ஒழுங்கிற்கும் கட்டுப்பட்டு சாத்மீக எதிர்ப்பைக் கைக்கொண்டு கிலாடத், பஞ்சாப் முதலிய விஷயங்களில் நியாயத்தையும், இந்தியா தேசம் தன் மதிப்பைக் காப்பாற்ற சுயராஜ்ஜியத்தையும் ஜல்தியில் பெற்று விட ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீமான். பூபதி பழனியப்ப நாயகர்

நீண்ட நேரம் சவிஸ்தாரமாகப் பேசினார். அப்போது கூறியதாவது:— இந்தச் சமயம் நமது தேசம் பெரிய கஷ்ட நிலையை அடைந்து நிலை கலங்கி நிற்கின்றது. பிரிட்டிஷார் கிலாபத் விஷயத்தில் முஸ்லிம்களுக்கு மாறாக நடந்து கொண்டிருக்கின்றனர். இஸ்லாமின் கலிபாவுக்குத் தக்க நியாயம் கிடைக்கும் வரை உலகத்தில் சமாதானம் என்பது வீண் கனவு. முஸ்லிம்களில் ஒருவருக்கு எல்லாக் கௌரவங்களையும்விட தனது மதத்தைக் காப்பாற்றுவதே சிறந்த கௌரவம், அதுவே தர்மம். ஆகவே அதற்கு எதையும் தியாகம் செய்ய தயாராயிருப்பர். இந்த உணர்ச்சியை மதித்தும் இந்தியாவிலுள்ள 7 கோடி மகமதியரின் கோரிக்கையை உணர்ந்தும் அவர்களுதவி ஏகாதிபத்தியத்தின் பலத்திற்கு அவசியம் என்பதைத் தெரிந்தும், பிரிட்டிஷார் உடனே துருக்கியின் விஷயத்தில் நடுக்கண்ட நியாயத்தைச் செய்து விடுவது அவசியம்.

பின்பு இஸ்லாமியர்களின் நன்மைக்காகவும், தங்களுள் ஏற்படும் விவகாரங்களை நமக்குள்ளேயே பைசல்செய்து கொள்வதற்கும் ஒரு அஞ்சுமனே சபை இவ்விடமிருக்க வேண்டுமென்றும் அதற்கு மூலதனம் இச்சபையிலேயே சேகரிக்கவேண்டுமென்றும், இதற்கு சமரஸபோதினி சுதேசமித்திரன் மலையாளம் உருது முதலிய தேச பாஷாபத்திரிகைகளையும் தருவிக்கவேண்டுமென்றும் அக்கிராசனர் ஜனாப் M. முகமது சுல்த்தான் சாஹிப் வேண்டிக் கொண்டார். அவ்வாறே ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. இச்சபைக்குப் பிரசிடெண்டு ஜனாப் க. சா. காதர்ஷா ராவுத்தர், வைஸ்பிரசிடெண்டுகள், சி. ச. மகமது குட்டி ராவுத்தர், ஆசிம் கமது ராவுத்தர், க. செ. பக்கீர் மகமத் ராவுத்தர். பி. ஏ. பக்கீர் மகமத் ராவுத்தர், அதிகாரி செய்யது மகமத் ராவுத்தர். கியாஷியர் M. N. வெள்ளையப்பா ராவுத்தர், காரியதரிசிகள் மெ. மா. செய்துட்டி ராவுத்தர். மௌலானா அப்துல் ரஜாக சாகிப், முதலியவர்களும் கமிட்டியில் 25 மெம்பர்களும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள். மூலதனத்திற்கு 775 ரூபாய் வரையில் வசூலிக்கப் பட்டது. கடைசியில் ஜனாப் அப்துல் ரஜாக் அவர்கள் அடுத்த மாசத்தில் இவ்வூரின் பல கிராமங்களையும் ஒன்று சேர்த்து மறுபடியும் பெரிய கிலாபத் மகாநாடு ஒன்று கூட ஏற்பாடு செய்யப்படுமென்று கூறி அக்கிராசனர் எம். முகமது சுல்த்தான் சாஹிப்பிற்கும் ஸ்ரீமான் பூபதி பழனியப்ப நாயகருக்கும் வந்தனமளித்தார். மகாநாடு இனிது நிறைவேறியது.

தஞ்சை ஜில்லா பிராஞ்சு போஸ்டு மாஸ்டர்கள் சங்கம்.

இம்மாதம் 19ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்குத் தஞ்சாவூர் தெற்கு வீதியிலுள்ள வி. எம். பாடசாலையில் நாகப்பட்டணம் ராவ் பகதூர் கே. எஸ் வேங்கடராமய்யர் அக்கிராசனத்தில் மேற்கண்ட சங்கத்தின் கூட்டமொன்று கூடியது. சுமார் 35 பிராஞ்சு மாஸ்டர்கள் வந்திருந்தார்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:—

(1) கும்பகோணம், மாயவரம், பட்டுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர் முதலிய விடங்களில் பிராஞ்சு சங்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் இச்சங்கங்களுக்கு ஸ்ரீமான்கள் பட்டீசுரம் இராஜ கோபாலய்யங்கார் ஆம்பல் தண்டபாணிப் பிள்ளை, ஒட்டன் காடு ரங்கராவ், டி. இ. கிருஷ்ண ஐயர், சாத்தனூர் சுப்பிரமணிய ஐயர். முதலியவர்கள் முறையே காரியதரிசிகளாகத் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.

(2) இந்தக் கிளைச் சங்கத்தார் தங்கள் சங்கப் பணத்தில் மூன்றிலொரு பங்கு தலைச்சங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென்றும் (3) ஏற்கனவே கேட்கப் பட்டிருந்த இருபது ரூபாய் அலவன்ஸ் உடனே கொடுக்கப்பட வேண்டுமென்றும், (4) தைப்பதற்கு நூல் மெழுகு இவைகள் தனித் தனியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும்,

5) கூடிய சீக்கிரத்தில் குடியிருப்பு அலவன்ஸ் ரூ மூன்று கொடுக்கப்பட வேண்டுமென்றும் (6) ஒரு அலமாரி, இரும்புப் பெட்டி இவைகள் தவிர இரண்டு பெட்டிகள் வழங்கப்பட வேண்டுமென்றும், (7) ரெகுலர் ஸெர்விஸில் காலியானால் பிராஞ்சு மாஸ்டர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும், (8) பிராஞ்சு மாஸ்டர்கள் டெலிவரி வேலையினின்றும் விலக்கப்பட்டு இதற்கெனத் தபால் சேவகர்களை நியமிக்க வேண்டுமென்றும், (9) பிராஞ்சு மாஸ்டர்களின் சொந்தக் கடிதங்கள் ஸெர்விஸ் கடிதங்களாகப் பாவிக்கப்பட வேண்டுமென்றும் (10) வேலை நிறுத்தம் உடனே செய்யப்படக் கூடாதென்றும் (11) அவசர காலங்களில் லீவு எடுத்தால் அதற்குப் பதில் அஸாமி ஒருவரை நியமிக்கும்படி வற்புறுத்தக் கூடாதென்றும் மூன்று நாளைக்கு மேல் லீவு எடுத்தால் மேலதிகாரிகளே பதில் ஆள் நியமிக்கவேண்டுமென்றும், (12) ஜனங்கள் கம்பளையன்ட் செய்தால் அதைப் பிராஞ்சு போஸ்டுமாஸ்டருக்கு அறிவிக்கவேண்டுமென்றும் (13) சிலசமயங்களில்பூட்டின் திறவுகோல் கெட்டுப்போய்விட்டாலாவது, வேறு இதர சாமான்கள் நாசமடைந்தோ அல்லது கெட்டுப்போனாலாவது அவைகளுக்குரிய சார்ஜைத்தான் கொடுக்கும்படி கேட்கவேண்டுமென்றும், கெட்டுப்போன சாமான்களுக்கு இரட்டிப்பு சார்ஜ் கேட்கக்கூடாதென்றும், (14) இத்தீர்மானங்கள் எல்லா இந்திய போஸ்டல் கான்பரன்சுக்கும், இராஜப் பிரதிநிதிக்கும், கல்கத்தாவிலுள்ள போஸ்டல் இலாகா டைரக்டருக்கும், சென்னைப் போஸ்டுமாஸ்டர் ஜெனராலுக்கும் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள சப் டிவிஷன் போஸ்டல் இன்ஸ்பெக்டர்களுக்கும் அனுப்பப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டன.

ஒத்துழையாமையும் தலைவர்களும்

விசேஷ காங்கரஸ் ஒத்துழையாமைத் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டதற்குப் பிறகும்கூட இந்தியாவின் பல மாகாணங்களிலுள்ள ஜனத்தலைவர்கள் ஒத்துழையாமைக்குச் சாதகமாகவும் பாதகமாகவும்அபிப்பிராயம்கொடுத்துவருகிறார்கள். ஆனால்பொதுவாக விசேஷ காங்கரஸின் தீர்மானத்தை அங்கீகரித்து அதன்படி நடப்பதுதான் உசிதமென்றும் காங்கரஸுக்குக் கீழ்ப்படிய வேண்டுவது ஒவ்வொரு காங்கரஸ் காரரின் கடமையென்றும் சென்ற வருஷங்களில் அதுவும் ஆகஸ்டுமாதம் வரையிலும் காங்கரஸையும் அதன் தீர்மானங்களையும் வெகுவாகச் சிலாகித்து ஊரெங்கும் கொட்டமடித்துப்பேசியவர்கள்செப்டம்பர்மாதத்தில் "காங்கரஸ் முன்யோசனையின்றித் தீர்மானம் செய்துவிட்டது. அதன்படி நடக்கமுடியாது." என்று சொல்லுவோர்களைக் கண்டிக்க வேண்டுமென்றும் ஓர் உணர்ச்சி பலப்பட்டு வருகிறது. ஒத்துழையாமைத் தீர்மானத்திற்கு விரோதமாயிருந்த மெஸர்ஸ் வி. விஜயராகவாசாரியரும், திவான் மாதவராவும் வழிகாண்பித்துக் காங்கரஸின் தீர்மானம் தங்களுக்கு ஒவ்வாமலிருந்தாலும் காங்கரஸ் தீர்மானப்படியே நடப்பது தர்மமென்றும் அதன் செல்வாக்கைக் குறைக்கக்கூடாதென்றும் பகிரங்கம் செய்துவிட்டார்கள். இவர்கள் நல்லவழி காண்பித்தார்கள் என்று ஜனங்கள் இவர்களைக்கொண்டாடுகிறார்கள். இந்தியாவின் பல மாகாணங்களிலுள்ள தலைவர்கள் ஒத்துழையாமையைப்பின்பற்றிக் காங்கரஸ் கொடி என்றும் பறக்கவேண்டுமென்று உணர்ந்து எங்கும் சங்கநாதம் முழக்கிறார்கள். நம் மாகாணத்தில் முக்கியமாக எங்கெந்தத் தலைவர்கள் ஒத்துழையாமையைப் பின்பற்றி நடக்கமுன் வந்திருக்கிறார்களென்பதைக்கீழே காணலாம்:—

ஸ்ரீமான்கள் வி. விஜயராகவாசாரியார் திவான் வி. பி. மாதவராவ் திரிச்சி கே. வி. ஜம்புநாதய்யர், சாத்தூர் சுப்பிரமணிய நாயனார், சேலம் டி. ஆதிநாராயண செட்டியார் (இவர்கள் பெயர்களைச் சென்றவாரப் பத்திரிகையில் அறிவித்துவிட்டோம்) நங்கவரம் என். டி. லட்சுமி நாராயண ஐயர், திரிச்சி வி. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் டி. வி. கோபாலசாமி முதலியார் மதுரை டாக்டர் இ. எஸ். ராமசுப்பு, சென்னை டி. வி. வேங்கடராமய்யர் முதலியவர்கள் சட்டசபைகளுக்கு அபேட்சகராக நிற்பதினின்றும் ஒற்றுழையாமையை முன்னிட்டுவிலகிக்கொண்டுவிட்டார்கள். சித்தூர் ஜில்லாவிலிருக்கும் பட்டதாரிகளில் ஒன்பது பேரும்பாலக்காட்டிலிருந்து 11 பேரும்ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் யூனிவர் ஸிடி ஸ்தானத்திற்கு நிற்கக்கூடாதென்றும் தாங்கள் தங்களுடையவோட்டுகளைக்கொடுக்கமுடியாதென்றும்தெரிவித்துவிட்டார்கள். மதுரைபாரிஸ்டர் மிஸ்டர் ஜோசப் வக்கீல் உத்தியோகத்தைப் பகிஷ்காரம் செய்துவிட்டு அலகபாத்தில் பிரசுரமாகும் "இண்டிபென்டென்ட்" பத்திரிகையின் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளப் புறப்பட்டு விட்டார் மதுரை வக்கீல் எம். எஸ். சேஷய்யங்காரும் சட்டசபைக்குஅபேட்சகராக நிற்கவில்லை யென்று சொல்லிவிட்டார். கோயமுத்தூர் மிஸ்டர் என். எஸ். இராமசாமி ஐய்யங்கார், திருப்பூர் டி. ஆஷர், பாரிஸ்டர் டி. பிரகாசம், ஸ்ரீவைகுண்டம் வக்கீல் மிஸ்டர் எஸ். கோபாலய்யர் கும்பகோணம் ராவ்பகதூர் என். கிருஷ்ணசாமி ஐயங்கார் மிஸ்டர் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் முதலிய காங்கரஸ்வாதிகள் சட்டசபையைப் பகிஷ்காரம் செய்துவிட்டார்கள்.

வங்காளம்.

வங்காளத்திலுள்ள ஆறு முஸ்லிம் வக்கீல்கள் கோர்ட்டுக்குப் போவதில்லையென்று முதன் முதல் பகிஷ்காரம்செய்துவிட்டது மற்றவர்களுக்கும் ஓர் உணர்ச்சியைக்கொடுத்துவிட்டது. முஸ்லிம் தலைவர்களே முதன் முதல் ஒற்றுழையாமையை நடத்திக் காண்பிக்கவேண்டுமென்று லாலா லஜபதிராய் அவர்கள் தெரிவித்ததற்கிணங்க அவர்கள் நாடெங்கும் பிரசார வேலை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள்.

வங்காள தேசீயத் தலைவர்களான மெஸாஸ் பி. சக்கரவர்த்தி வி. ஆர். தாஸ் போன்ற சுமார் 24 கனவான்கள் சட்டசபைக்கு நிற்பதினின்றும் விலகிக்கொண்டுவிட்டார்கள். மிஸ்டர் வி. ஜெ. பேடல் தமது இராஜப்பிரதிநிதி சட்டசபை ஸ்தானத்தையும் பம்பாயிலுள்ள பந்திரா முனிஸிபாலிடி மெம்பர் ஸ்தானத்தையும் ஒற்றுழையாமையை முன்னிட்டு ராஜிநாமா செய்துவிட்டார். இத்துடன் நில்லாமல் அவர் அரசாங்க சபை மெம்பர் ஸ்தானத்திற்கு அபேட்சித்து நின்றதையும் வாபீஸ் வாங்கிக்கொண்டுவிட்டார். மகாராஷ்டர தேசத்திலுள்ள திலகர் கட்சியினர்கள் காங்கரஸ் தீர்மானப்படியே எல்லோரும் நடக்கவேண்டுமென்று பகிரங்கம் செய்துவிட்டார்கள்.

ஐக்கிய மாகாணத் தலைவர்களில் ஒருவரும், அமிர்தசரஸ் காங்காஸ் பிரிஸிடென்டாயுமிருந்த பண்டிட் மோடிலால் நேரு கவர்ன்மெண்டாருக்கு ஒரு கடிதமெழுதி அதில் தமது ஐக்கிய மாகாண சட்ட சபை மெம்பர் ஸ்தானத்தையும் டெல்லி தர்பார் பதக்கத்தையும் ராஜிநாமா செய்துவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இனி தம் காலத்தை ஒற்றுழையாமை இயக்க முன்னேற்றத்திற்குச் செலவிடுவதாக அறிவித்துவிட்டார்.

அமிர்தசரஸிலுள்ள முஸ்லிம் தலைவர்களும் ஹிந்துக்கள் தலைவர்களும் சட்ட சபையைப் பகிஷ்காரம் செய்துவிட்டார்கள். பஞ்சாப் தலைவர்களில் சிலர் பகிரங்கமாகச் சட்டசபையைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்றிருக்கிறார்கள். இன்னும் சிலர் தைரியமாக முன்வரவில்லை. நாடெங்கும் அநேகர் கௌரவ உத்தியோகங்களை ராஜிநாமா செய்திருக்கிறார்கள்.

தஞ்சைத் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

வருஷபூர்த்தி கொண்டாட்டம்.

இம்மாதம் 19 தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 12-மணிக்குத் தஞ்சை தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்க வருஷபூர்த்தி கொண்டாட்டம் கொண்டாடப்பட்டது. அநேகமாக எல்லாத் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீமான் இ. சூரியநாராயண ஐயர்

"சமரசபோதினி" பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான்ஐயர் அவர்கள் அக்கிராசனபாரதவிக்கு ராவ்பகதூர் கே.எஸ்.வேங்கட்டராமய்யரை பிரரேபணை செய்தார். இந்தப் பிரரேபணை கலியாணபுரம் கிராம முன்சீபால் ஆமோதிக்கப்பட்டவுடன் ராவ்பகதூர் கே. எஸ். வேங்கடராமய்யர் அக்கிராசனம் வகித்தார். காரியதரிசி பின்னர் சங்கத்தின் சென்ற வருஷ ரிபோர்ட்டை வாசித்து முடித்தார்.

அக்கிராசனர்

அனுபவ விஷயங்களைக் கொண்டு வெகு அருமையாகப் பேசினார் அவர் பேசியவைகளில் முக்கியாம்சங்களைப்பற்றி மாத்திரம் வெளியிடுகிறோம்:—

தஞ்சாவூர் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம் முதன் முதல் ஏற்படுத்தப்பட்டபோது என் நண்பர் ஸ்ரீமான் இ. சூரியநாராயண ஐயர் அக்கிராசனம் வகித்து நடத்தினாரென்பது உங்களுக்குத்தெரியும். ஸகஜமாக மேனாட்டார்கள் இந்தியர் சங்கங்கள் ஸ்தாபித்தால் அவைகளைச் சரிவர நடத்துவது கிடையாதென்று சொல்வதுண்டு இவ்வாறு இவர்கள் சொல்லிவந்தது தஞ்சாவூர் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்க விஷயத்தில் அடிபட்டுப்போய்விட்டது. இதுவரையில் இச்சங்கத்தார் 22 மீட்டிங்குகளைக்கூட்டி நடத்திவந்திருக்கிறார்கள். இச்சங்கத்தார் நல்ல வேலைகள் செய்துவந்திருப்பது எல்லோருக்கும் நிதர்சனமாகவிருக்கிறது.

அதிகாரிகளின் அறியாமை

அதிகாரிகள் கிராம உத்தியோகஸ்தர்கள் கஷ்டங்களைச் சரியாக உணராமலிருகிறார்கள். அதிகாரிகளுடைய கவனக்குறைவால் கஷ்டங்கள் அதிகரித்துவருகின்றன. கிராம உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு ரூபாயைக்கொண்டு வசித்துக் காலங்கழிக்கமுடியுமோ அவ்வளவு ரூபாய் கொடுக்கவேண்டுவது அவசியம். குறைந்தது முப்பது ரூபா பிடிக்குமென்று கவர்ன்மெண்டாரே அறிவித்திருக்கின்றனர். இங்ஙனமிருக்க, இதற்கு விரோதமாக கவர்ன்மெண்டார் நடப்பது தகாதகாரியம். கிராம உத்தியோகஸ்தர்கள் மனம் தளராமல் வேலை செய்யுமாறுவேண்டுகிறேன்.

முடிவில் அக்கிராசனர் மேலதிகாரிகளுக்குச் சப்ளைசெய்யவேண்டிய விஷயமாய் அவர்கள் படும் கஷ்டங்களைப்பல் அனுபவங்களால் எடுத்துச் சொன்னார்.

ஸ்ரீமான் இ. சூரியநாராயண ஐயர்

பிறகு ஸ்ரீமான் ஐயர் அவர்கள், கிராம உத்தியோகஸ்தர்களுக்குச்சில புத்திமதிகள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க சில விஷயங்களை எடுத்துச்சொன்னார். கிராம உத்தியோகஸ்தர்களுடைய இயக்கம் பலப்பட்டு முன்னடைந்திருப்பது கடவுளுடைய அனுக்கிரகமென்றும், கிராம உத்தியோகஸ்தர்களில் கர்ணன்களாகட்டும் முன்சீப்களாகட்டும் அக்கிராசனர்கூறியதுபோல், தைரியமாகவிருக்கவேண்டுமென்றும், பொய் விஷயங்களைக் கலவாமல் உண்மையை நாடியே உழைக்கவெண்டுமென்றும், கிராம உத்தியோசஸ்தர்கள் ஒரே மனதாக வேலைசெய்தால் சீக்கிரத்தில் நன்மை ஏற்படுமென்றும் வற்புறுத்தினார்.

ஸ்ரீமான் ஸி. எஸ். கிருஷ்ணசாமி ஐயர்

பேசியதின் சுருக்கமாவது:—கிராம உத்தியோகஸ்தர்கள் சங்க முன்னேற்றத்திற்கு ஸ்ரீமான் இ. சூரியநாராயண ஐயர் அவர்களும், ராவபகதூர் கே எஸ். வேங்கடராமய்யரவர்களும், காரியதரிசி ஸ்ரீமான் வி. சுப்பய்யர் அவர்களும் வெகு பாடுபட்டிருக்கிறார்கள். கிராம உத்தியோகஸ்தர்களிடத்தில் உணர்ச்சியும் ஒற்றுமையுமிருப்பது சிலாகிக்கத் தக்கதென்றும், கிராம முன்சீப்களை மரியாதையாக நடத்துவதாகக்கூறிவிட்டுச் சம்பளத்தைக் குறைத்திருக்கிறார்கள். ஆனால் உண்மையைப் பார்க்கப்போனால் கிராம முன்சீப்கள் கௌரவமாகப் பாவிக்கப்படவில்லை! சட்டத்தில் அவர்களுடைய யோக்கியதை குறைக்கப்பட்டிருக்கிறது. கிராமப் பஞ்சாயத்து மசோதாவிலும் லோகல்போர்ட்ஸ் மசோதாவிலும் குறைக்கப்பட்டிருப்பதை யாவரும் அறிவர். கௌரவமாகவும் கிராம முன்சீப்கள் பாவிக்கப்படவில்லை; சம்பளமும் குறைவு செய்யப்பட்டிருக்கிறது. இத்தியாதி விஷயங்களைக் கவனித்துகிராம உத்தியோகஸ்தர்கள் சொற்பவனையடைந்துவிட்டதாக நினைத்துச் சும்மாயிராமல் 30 ரூபா சம்பளம்கொடுக்கப்படவேண்டுமென்று வற்புறுத்தவேண்டும்.

பிறகு ஸ்ரீமான் இ. சூரியநாராயண ஐயருக்கும் ஸ்ரீமான் ஸி. எஸ். கிருஷ்ணசாமி ஐயருக்கும் அக்கிராசனருக்கும் மாலையிட்ட பிறகு கூட்டம் கலைந்தது,

ஜில்லாக் கூட்டம்.

பிறகு 4-மணிக்கு அதேவீடத்தில் அதே அக்கிராசனரின் கீழ் கிராம உத்தியோகஸ்தர்கள் ஜில்லாக் கூட்டம் கூடியது.

1 (a) கிராம முன்சீப்களுக்கு 30 ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்று ஸ்ரீமான் வாசு அய்யர் பிரரேபித்தார். இதை மன்னார்சமுத்திரம் முன்சீப் ஸ்ரீமான் முத்துஸ்வாமி ஐயரும், வரகூர் முன்சீப் ஸ்ரீமான் எம். அண்ணாத்துரை ஐயரும், கல்யாணபுரம் முன்சீப் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்காரும், ஸ்ரீமான் இரத்தனவேலுப்பிள்ளையும் ஆதரித்தார்கள். பிறகு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(b) இனும் கிராமங்களிலிருக்கிற கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் 30 ரூபாய் கொடுக்கப்படவேண்டுமென்ற கொந்தகை ஸ்ரீமான் சாட்சிநாதபிள்ளை பிரரேபித்தார். ஸ்ரீமான் துரைசாமி பிள்ளை ஆமோதித்த பிறகு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

(2) தாலுக்காவிற்கு வரும்போது தினசரிப்படி மைலுக்கு மூன்றணவீதமும்சாப்பாட்டுச் செலவு வகையறாகளுக்குத் தினம் ஒரு ரூபா கொடுக்கவேண்டுமென்றும் (3) சர்வே டிரெயினிங்கான கர்ணன்களை சர்வே பரீட்சைக்குப்போம்படி கட்டுப்படுத்தக்கூடாதென்றும் (4) வட்டத்தில் வசிப்பதற்கு வசதியில்லாத கிராம உத்தியோகஸ்தர்கள் அவரவர்கள் வட்டத்தின் சமீபத்தில் வசிக்க உத்தரவு கொடுக்கவேண்டுமென்றும் (5) கோர்ட் சம்மன்பேரில் சாட்சியம் கொடுக்கப்போகும் தினங்கள் கிராம உத்தியோகஸ்தர்கள் டியூட்டியிலிருப்பதாகப் பாவிக்கப்படவேண்டுமென்றும், (6) பென்ஷன் இல்லாத உத்தியோகஸ்தர்களுக்குப் பிராவிடன்ட்பண்டு ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோல் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்படுத்தவேண்டுமென்றும் முக்கிய தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பிறகு அக்கிராசனரின் வேண்டுகோளின்பேரில் கனம் அகமத்தம்பி மரைக்கயர் சில வார்த்தைகள் சொல்லி கிராம உத்தியோகஸ்தர்களுடைய முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதாகக்கூறினார், அக்கிராசனர் முடிவுரையாகச் சில நன்மதிகள்கூறிய பிறகு விஜயம் செய்திருந்த தஞ்சாவூர் தாலுக்கா தாசில்தார் அவர்களுக்கும் மற்றுமுள்ள பிரமுகர்களுககும் மாலை சூட்டிய பிறகு கூட்டங் கலைந்தது.

தந்திச் செய்தி.

லாகூரில் பிரசுரமாகும் "ஜமீன்தார்" பத்திரிகையின் ஆசிரியரான மௌல்வி ஸாபர் அலி கான் இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி பஞ்சாப் கவர்ன்மெண்டார் உத்தரவின் பேரில் முர்ரி என்னுமிடத்திற்குப் போகும்போது அரெஸ்டு செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுவருகிறார்.

* *

புது சீர்திருத்தப்படி அமைக்கப்படும் அரசாங்க சபைக்கு இந்தியா கவர்ன்மெண்ட் நிர்வாக சபை மெம்பர்களில் ஒருவராகிய மிஸ்டர் மட்டிமான் அக்கிராசனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* *

இராஜப் பிரதிநிதி சட்டசபை (லெஜிஸ்லேடிவ் அஸம்பளி) க்கு மிஸ்டர் அலெகசாண்டர் ஒயிட் அக்கிராசனராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* *

கனம் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி ஐயர் இம்மாதம் 20 ந் தேதி தம் ஜட்ஜ் பதவியினின்றும் விலகியிருக்கவேண்டும். ஆனால் இரண்டு மாதம் இன்னும் உத்தியோகத்திலிருக்கும்படி வேண்டப்பட்டிருப்பதனால், அவர் இன்னும் விலகிக்கொள்ளவில்லை.

* *

பஞ்சாப் தலைவர்கள் இராணுவச் சட்டப்படி சென்ற வருஷம் தண்டிக்கப்பட்டார்களென்ற காரணத்தினால் சட்ட சபைக்குநிற்கக்கூடாதென்றிருந்தநிபந்தனை இப்பொழுது நீக்கப்பட்டுவிட்டது. 27 கனவான்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறார்கள்.

* *

கவர்ன்மெண்டார் 1920 ம் ஜூன் 1-ந் தேதி வெளியான 499 உத்தரவுப்படி 4 ரூபா அலவன்ஸ் எலிமெண்டரி உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கவேண்டி ஜில்லா போர்டார்களுக்கும் முனிசிபாலிடிகளுக்கும் 879,054 ரூபா கொடுத்திருக்கின்றனர்.

* *

ஒத்துழையாமையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதைப்பற்றியோசிக்க எல்லா இந்திய காங்கரஸ் கமிட்டியின் கூட்டமொன்று பம்பாயில் அடுத்தமாதம் 2-ந் தேதி கூடும்.

* *

நாகப்பூரிலுள்ள முக்கியமான தலைவர்கள் ஸ்ரீயுத அரவிந்த கோஷை டிசம்பரில் கூடும் காங்கரஸுக்கு அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

* *

சென்னை மாகாண காங்கரஸ் கமிட்டியார் நாகப்பூர் காங்கரஸுக்குச் சென்னை மாகாணத் தலைவர்களான ஸ்ரீமான்கள் வி. விஜயராகவாசாரியரையும், டாக்டர்எஸ். சுப்பிரமணிய ஐயரையும் அக்கிராசனர் பதவிக்குச் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

* *

லாலா லஜபதிராய் சட்டசபையைப் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும் காங்காஸ் தீர்மானப்படி நடக்கவேண்டுமென்றும் அறிவித்திருக்கிறார்.

* *

சென்னை மாகாணத்திற்கு வருவதாயிருந்த சுவாமிசிரத்தானந்தர், தேக அசௌகரியத்தால் வரமுடியவில்லையென்றும் பின்னர் ஒரு முறை வரப்பார்ப்பதாகவும் எழுதியிருக்கிறார்.

* *

அமெரிககாவில் எழு குழந்தைகளுடைய ஒருத்திப் பஞ்சம் தாங்காமல் தன் அழகிய புருஷனை நாலாயிரம் பவுனுக்கு யாரேனும் ஸ்திரீகள் ஏலம் கேட்டால் விற்றுவிடுவதாக விளம்பரம் செய்திருக்கிறார்களென்று கல்கத்தா "ஸ்டேட்ஸ்மான்" பத்திரிகை கூறுகிறது.

* *

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர்களும். பார்லிமெண்ட் மெம்பர்களுமான கர்னல் வெட்ஜ் ஊட்டும் மிஸ்டர் பென்ஸ்பூரும் நாகப்பூர் காங்கரசுக்கு விஜயம்செய்யஉத்தேசித்துப் பிரயாணச்சீட்டும்வாங்கி விட்டார்களென்றும், அவர்களில் மிஸ்டர் வெட்ஜ் ஊடை அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கலாமென்றும் கல்கத்தாவில் சிலர் அபிப்பிராயப்படுவதாக ஒரு செய்தி கூறுகிறது.

* *

சென்னை மாகாணத்தில் மொத்தம் 651 ரிவினியு பிர்காக்களிருக்கின்றன. வேலைகள் சரிவர நடக்கும்பொருட்டு 938 பிர்காக்களாகச் செய்யப்படும். பிர்க்காக்கள் அதிகமானால் ரிவின்யு இன்ஸ்பெக்டர்களும் அதிகமாவார்களாகையால் வருஷம் 96,660 ரூபாயைக் கொடுக்கக் கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

* *

இந்தியா மந்திரி சபையிலிருக்கும் மெம்பரான மிஸ்டர் பூபேந்திரநாத்பாஸு வங்காளச் சட்டசபைக்குப் பிரிஸிடென்டாகவும் சென்னைச் சட்டசபைக்கு ஸர். சங்கரன்நாயர் பிரிஸிடென்டாகவும் நியமிக்கப்படலாமென்றும், மிஸ்டர் மான்டேகு இந்தியாவுக்கு இராஜப்பிரதிநிதியாக வரமாட்டாரென்றும் லீடர் பத்திரிகையின் லண்டன் நிருபர் எழுதுகிறார்.

* *

அலிகர் எம். ஏ. ஓ. காலேஜ் தர்மகர்த்தாக்கள் கவர்ன்மெண்ட் பணத்தைப்பெற்று அக்காலேஜை நிர்வாகம் செய்யக்கூடாதென்றும், இஸ்லாத்திற் விரோதமாக நடந்துகொண்ட கவர்ன்மெண்ட் பணத்தைப் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்றும் முஸ்லிம்கள் அதற்கு உதவி செய்ய வேண்டுமென்றும் மெஸர்ஸ் யாகுப் ஹஸன், டாக்டர் கிச்லு, ஹஸரத் மோஹனிபோன்ற முஸ்லிம் தலைவர்கள் ஒரு விண்ணப்பமனுப்பியிருக்கிறார்கள்.

காலப் போக்கு.

"குக்கிராம உளவன்" காலப்போக்கைப்பற்றிக் கிராமங்களில்காண்கிறபடி எழுதுகிறார்:—

முந்தன் முதல் என் புருஷ ஆயுவில் கண்டேனையா! ஒரு அதிசயம். சீட்டுக் கச்சேரியையுமா கலைத்து விடும் ராஜீய வாதம்? ஒரு சீட்டுக்கச்சேரியை நடத்திய நாலைந்து பேருக்குள் பெரிய பேரிரைச்சல் கிளம்பியது. நான் பக்கதது வீட்டில் உட்கார்ந்திருந்தேன். என்ன சண்டையோ? வென நடுங்கி வாசலில் ஓடிவந்தேன். சீட்டுக்கட்டு ரோஷத்துடன் வாசலில் எறியப்பட்டது. இந்த இரைச்சலுக்குச் காரணம் இதுதான் என நீங்கள் இப்பொழுது நினைப்பீர்கள். அதுபோலவே நானும் நினைத்தேன். ஆனால் அதுதானில்லை. விவாத மென்ன வெனில் சீட்டாடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலுங்கூட எதோ ராஜீய விஷய சமாசாரம் இவர்கள் வார்த்தையாடி வந்தனர்போலும்! "தேசீயக் கக்ஷி" 'மிதவாதக் கக்ஷி' யென்று சினேக ஹானியான துறையிலிறங்கி, அந்த அந்தக் கச்சேரியை முக்கியமாய் நடத்தியதின் பயனாக ஒரு தெளர்ப்பாக்கியரான மிதவாதிக்கு ஆபத்தாய் முடிந்தது. இவர் இதற்கு முன் சீட்டாட்டத்தில் கர்ஜித்துக்கேட்டிருக்கிறேன். என் உடல் அப்பொழுது நடுங்கியது எனக்குத் தெரியும். ஆனால் இன்று கர்ஜித்த கர்ஜனை என்னைத் தூக்கி வாரிப்போட்டது. சீட்டைக் கடைத்தெருவிலெறிந்தார். கொண்டு வந்தார் பத்திரிகைகளை. நன்றாக வாதித்தார்கள் அவரிடம் எனக்குச் சற்று அபிமானமு முண்டாயிற்று. இரு கட்சியினரும் போட்டுப் புரட்டி வாக்கு யுத்தம் வெகுகோரம் புரிந்தார். சீட்டாட்டச் சண்டைகளை விட இதில் அதிக இரைச்சலும் ஜனங்களுக்குச் சிரத்தையுமிருக்கக் கண்டு சந்தோஷ மடைந்தேன். காலம் முற்றிலும் மாறி விட்டதென்றறிந்தேன். அதிகாரிகள் கிராம வாசிகளுக்கு அரசியல் விஷயத்தில் அக்கரை கிடையாதென்று சொல்வது பொய் என்று உணர்ந்தேன்.

*　　　*

ஐயோ! பாவம்! நாடகக்காரர்கள் கதி பரிதாபமானதுதான்:— நாடகம் வெகு வருஷங்களாக நடத்தித் திரவிய லாபத்தைக் கண்ட ஒருவர் என்னிடம் தங்கள் தொழிலுக்கு வந்திருக்கிற ஆபத்தைப்பற்றி உருக்கமாய்ப் பேசினார். அதை என் நண்பர்களுக்கு அறிவிக்காமலிருக்க முடியவில்லை. ஸாமான்ய ஜனங்கள்தான் எங்களை ஆதரித்து வந்தார்கள். கண்யமுள்ள கனவான்களும் தனவான்களும் நாடகம் போவது என்றால் முக்காடிட்டுப் போகவேண்டிய ஓர் இழிவான வியாபாரம் என்று கருதி வந்தார்கள். ஆகவே இதுவரையில் நாங்கள் ஏழை ஜனங்களைக் கொண்டே பிழைத்து வந்தோம். உங்கள் ராஜீய விவகாரங்களைக்கொண்டு எங்கள்வாயில் மண்ணைப் போட்டு விட்டீர்களே. இதுநியாயமா? நாடகக் கொட்டகையிலும் புகுந்து "பஞ்சாபின்" துயரம் என்றபரிதாபக் கதையைப் போன்ற கதைகளைத் தேசிய வாதிகளும் மற்றோரும் ஜனங்களுக்கு விரித்தும், தொகுத்தும், ஆவேசத்துடனும், நடனத்துடனும் ஆடல் பாடல்களுடன் பேசும்பொழுது நாடகத்தை விட மேலான நாடகம் போல் நடத்திக் காட்டுகிறார்கள். அந்த ருசியில் ஈடு பட்டு எங்கெங்கு யார் யார் உபந்நியாசங்கள் செய்கிறார்களோ அங்கங்குப் போவதையே ஜனங்கள் நாடகம் போவதற்குப் பதிலாய்க் கொண்டு விட்டார்கள். என்று வருத்தத்துடன் சொன்னார். எனக்குப் பரிதாபமாயிருந்தது. ஆயினும் நாமென்ன செய்வது? எல்லாத் துறைகளிலும் சுதந்தரவேகம் பாய்ந்து ஒரு கலக்குக் கலக்கும்போது நாடகத்துறை இதற்குத் தப்ப முடியுமா?

1,000 ரூபா இனும்.

உலகப்பிரசித்திபெற்ற சாலா மிசிரி முறப்பா.

கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர் ஆயிருக்கிறது.

இப்பண்டிதர் சென்ற 6-வருஷ காலமாகப் பாடுபட்டுச்கொண்டு வருகிறார்.



தினந்தோறும் ஆப்பிரிக்கா, பர்மா, சிலோன், பனங், சிங்கப்பூர், இரங்கூன், கல்கத்தா, பம்பாய், ஐதராபாத், மதராஸ முதலியஇடங்களிலிருந்து அநேகமாய் ஆர்டர்கள்வந்துகொண்டிருக்கின்றன. மேற்கண்ட முறப்பாவை உபயோகித்து குணமடைந்த சங்கதிகளுக்கும் அதன் பரிணாமத்தைப்பற்றியும் அநேக சர்டிபிகேட்டுகள் அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். எமக்கு கிடைத்திருக்கிற சர்டிபிகேட்டை பார்க்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் தபால் மூலமாய் தெரிவித்தால் பிரியமாக அனுப்புகிறோம். சாலமிசிரி முறப்பா சாலமிசிரியாலசெய்யப்படவில்லையென்றும், அல்லது சர்டிபிகேட்டைப் பொய்யென்றும் ரூபிக்கிறவர்களுக்கு 1000 ரூபாய் இனும் கொடுக்கப்படும். அம்மாதிரியாக ரூபித்து மேற்கண்ட ரூபாயைக் கொடாதிருக்கும் பட்சத்தில் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்து கொள்ளலாம். இதுமனிதர்களுக்குப் பால்ய சேஷ்டைகளினாலும், துர் சகவாசங்களினாலும் எற்படக்கூடிய தாது நஷ்டத்தைக் கண்டிக்கப்பட்ட ஒருவித ஜீவரத்தினம்போலிருக்கின்றது. சாலாமிசிரி முறப்பா, அநேக விலையுயர்ந்த பதார்த்தங்களினாலும், அநேகவன மூலிகைகளாலும் தயார் செய்யப்பட்டிருக்கின்றது இதில் மத விரோதமான எவ்வித பதார்த்தங்களும் சேர்க்கப்படவில்லை. யாவரும் சாப்பிடலாம். வெள்ளி பஸ்பம், தாம்பிரபஸ்பம், தங்கபஸ்பம் எவ்வித பஸ்பங்களும் இதற்குமுன் நிற்காது. ஒருதரம் வரவழைத்து பரீட்சித்துப் பார்த்தால் பின் தங்களுக்குகே தெரியவரும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிபோல் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வது எல்லாருடைய கடமையாயிருக்கிறது. கிரயம் டப்பி 1-க்கு ரூ. 2—0—0. போஸ்டேஜ் டப்பி 1-க்கு அணா 8. 2 அல்லது 3 டப்பிக்கு அணா 12. ஆர்டர்கள் கொடுக்கப்பவர்கள் தங்கள் விலாசங்களை விபரமாகவும் தெளிவாகவும் எழுதவேண்டியது.

எங்கள் முறப்பாவை வாங்கப்பட்டவர்கள் டப்பியின்மேல் ரிஜிஸ்டராயிக்கப்பட்ட டிரேட் மார்க்கைப் பார்த்தும் அடியிற்கண்ட விலாசம் சரியாக இருக்கப்பட்டதைப் பார்த்தும் வாங்குகள். இல்லாவிடில் மோசம் போவீர்கள். ஒரு தடவை உபயோகித்தால் பூரணகுணமாகும் இரண்டு, மூன்று டப்பிகளை உபயோகித்தால் மரணகாலபரியந்தம் எவ்விதமான வியாதியும் அணுகாது. நமக்கு ஏஜண்டுகள் தேவையாயிருக்கிறது. இஷ்டமிருக்கும் பட்சத்தில் எங்கள் ரூல் சட்டத்தைக் தருவித்துப் பாருங்கள்,

டி. மன்னுலால், டில்லிவைத்தியர், சாலாமிசிரி முறப்பா டிபோ, பெங்களூர் சிடி.

சவரன் படைமருந்து.

எப்பேர்ப்பட்ட தீராத மேகப்படைகளையும், மேகரணங்களையும், வண்ணான் சிரங்கு பொறுக்க முடியாத நமைச்சல்களையும் 24 மணி நேரத்தில் கண்டிப்பாய் குணப்படுத்தும். குணமில்லையென்றால் பணம் வாபீஸ் செய்யப்படும். புட்டி 1-க்கு அணா 12. 3 புட்டிக்கு சார்ஜ் இனும்.

சவரன் அண்டு கம்பெனி,
10, கச்சாலீஸ்வர அக்ரஹாரம், சென்னை.

சந்தாதாரர்களே!

சுமார் இரண்டு வருடகாலமாகத் தமிழ் நாவலர் அ. மா. மாதவராய முதலியாரால் நடத்தப்பட்டு சன்மார்க்கபோதனை, பழமொழிகள், நாவல்கள், விகடங்கள், இவற்றுடன் வெளிவரும் குணபோதினி என்றமாதப்பத்திரிகையை ஆயிரக்கணக்கான ஜனங்கள் வாசிக்கின்றனர். நீங்களும வாசியுங்கள்.

வருடசந்தா ரூபா 1—8—0.

குணபோதினி ஆபீஸ், பெங்களூர். (ச)

ஓம்.

மஹானருளிய

மூலிகையாலும் தாயத்தாலும் எவ்வித வியாதிகளும் கவலைகளும் உடனே நீங்கும். 48 நாளில் கெர்ப்பம் உண்டாகும். பதிலுக்கு (ஸ்டாம்பு) அனுப்பினால் உடனே சகல விபரமும் கிடைக்கும்.

எஸ். எ. கே. பிள்ளை, மேட்டுப்பாளையம்,
கோயமுத்தூர் ஜில்லா, (சவுத் இந்தியா.)

சரக்கு நயம்!　　　விலை சரசம்!!

எல்லாவித கெட்டிச் சாயபவுடர்கள்.

நூல்களுக்கும் துணிகளுக்கும் பட்டு & கோரைகளுக்கும் சாயம் போடுவதற்கு நயமானது. காங்கோரெட் சிகப்பு காசிகப்பு மரூன் கெட்டி ரோஸ்பட்டு ரோஸ், புதுக் கோட்டை சாயம், பட்டு புனு பச்சை மஞ்சள் ஆறஞ்சி முதலிய சாயப்பவுடர்கள் எல்லாவித அச்சி கட்டைகள் அச்சிக்கு வேண்டிய உப்பு காறங்களும் சாயம் போடப்பட்ட விதம் சொல்லி சகாயமான விலைக்கு மொத்தமாயும் சில்லரையாயும் விற்கப்படும். வேண்டியவர்கள் நேரிலும் வி. பி. மூலமும் பெற்றுக் கொள்ளலாம். காயிதம் எழுதுவோர் சரியான விலாசம் ஊர் மார்க்கம் ஸ்டேஷன் தெளிவாய் எழுதவேண்டியது.

சி. ஆர். ராமய்யர் & ஸன்ஸ்,
சாயபவுடர் வியாபாரிகள்,
2/1276 பந்தடி 5-வது தெரு,
மதுரை.

நேர்த்தியான பிரின்டிங்

ஜீ. எஸ். மணியா அண்டு கோ., தஞ்சாவூர்.

இவ்வச்சி யந்திரசாலையை மிஸ்டர் கோபால சாமிஐயரிடமிருந்து வாங்கி இப்போது மிஸ்டர் டி. எஸ். கிருஷ்ணராவ் வெகு நன்றாகவும் கிரமமாகவும் நடத்திவருகிறார். இந்த அச்சியந்திர சாலையில் தமிழ், இங்கிலீஷ் புஸ்தகங்கள், நோட்டீசுகள் விஸிடிங்கார்டுகள், கோர்ட் பெடிஷன்கள் மற்ற மனுபாரங்கள் சுத்தமாகவும் நேர்த்தியாவும் அச்சடித்துக் குறைந்தசார்ஜுக்கு வேலை செய்து கொடுக்கப்படும். முனிஸிபாலிடியார்களும் ஜில்லா போர்டார்களும், இந்த அச்சுக்கூடத்தின் நேர்த்தியான பிரின்டிங்கைக் கவனித்து இதில் அச்சுவேலை கொடுத்து வருகிறார்கள். குறித்த காலத்தில் வேலை செய்து கொடுக்கப்படும்.

உபயோகித்தீர்களா?

எதுவும் ஒரு முறையாவது பரீக்ஷை பார்க்கவேண்டியதுண்டு. பரீக்ஷித்தால் "உமாஷங்கர்" முக்குத்தூளே சர்வ சிலாகியமென்பதைக் கண்டு கொள்ளுவீர்கள்.

கோயமுத்தூர் ஜில்லா அனுப்புப்பாளையம் (No. 2064) T. M. C. எழுதுவது:— "தங்கள் தூள் சிரேஷ்டமாயிருக்கிறது. 15 நாளுக்கொருதரம் 15 பலம் அனுப்பி வாருங்கள்."

5 பலம் வி. பி. தபாற் கூலியுள்பட அணா15.

"ஸ்ரீ உமாஷங்கர்" ஔஷதாலயம்,

சு. பிராட்வே, சென்னை.

T. B. Jayasunker Davey
இயற்றிய
ரத்னப் பிரகாசம்.

நவரத்தினங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷை, நல்ல ரத்தினங்களை அணிவதனால் உண்டாகும் நன்மைகள் இவைகளைபற்றி கூறும் அபூர்வ நூல். விலை அணா 8.

Apply to:—
R. B. தவே அண்டு சன்ஸ்,
தஞ்சாவூர்.

இனிய நாவல்கள்.

பாலாமணி	2—0—0
மேனகா 1-ம் பாகம்	1—8—0
ஷை 2-ம் பாகம்	1—8—0
வஸந்த மல்லிகா	1—0—0
ராஜேந்திர மோஹனா	0—12—0
தென்னூர் கோலை	1—4—0

எங்களிடம் எல்லாவிதத்தமிழ்ப் புஸ்தகங்களும் இருக்கின்றன. உடனே கியாட்லாகுக்கு எழுதுங்கள். இனமாய் அனுப்பப்படும்.

சாரி அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 281, மதராஸ்.

என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம். வாழ்க்கையின் சுகம், காதற்பெருக்கு, பரவச முதிர்ச்சி முதலானதுகளை ஊட்டுகிறவன்.
,, ஸ்திரீ புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனால்தான்

சகலதேச வாலிபர்களும், ஸ்திரீகளும், புருஷர்களும் என்னை விரும்புகிறார்கள்,

நான்தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0

சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.

விலாஸம்:—

பி. எஸ், ராய், புதுவை.

பெரிய கம்பெனி! நாணயமான சரக்குகள் !!

திருப்தியில்லாத சரக்குகள் திரும்பப் பெற்றுச் சுத்தமான பட்டு, சகாய விலை, புதுமாதிரியான பட்டுப்புடவைகள், ரவிக்கைகள், சால்வைகள், வெண்பட்டு வேஷ்டிகள், தாவணிகள், மலைபாளத்து முண்டுகள் முதலிய எல்லாப்பட்டு தினுசுகளும் கிடைக்கும். எந்தப் புதுமாதிரியும் நெய்து அனுப்பலாம்.

புடவைகள் 20 முதல் 250 ரூபா வரை கிடைக்கும். ரவிக்கைகள் 3 முதல் 15 ரூபா வரையில் கிடைக்கும். வெண்பட்டு வேஷ்டிகள் 10×6 ஜோடி 20 முதல் 35 ரூபா வரையும் 9×6 ஜோடி 1-க்கு 18 முதல் 30 ரூபா வரை.

மற்றும் எல்லா விபரங்களுக்கும் கேட்லாக் தருவித்துப்பார்த்துக்கொள்ளவும்

கேட்லாக் இனம் !

Manager.
Silk Pitamber Co.,
Dharanagar Street,
BENARES CITY.

விலாசம்:—
மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள்.



உங்கள் நகைகளையும் விலையுயர்ந்த சாமான்களையும் இந்த லட்சுமி டிரங்குப் பெட்டியில் வைத்துப் பூட்டுங்கள். எங்களுடைய தொழிற்சாலைகளில் தகுந்த வேலைக்காரர்களைக் கொண்டு எஃகுத் தகடுகளினால் டிரங்குப் பெட்டிகள் செய்யப் படுகின்றன. கண்ணனூர் கொச்சி மைசூர், விசாகப்பட்டணம், கும்பகோணம் முதலியவிடங்களில் நடந்த தொழிற்பொருட் காட்சி சாலைகளில் தங்கப்பதக்கப் பரிசும் வெள்ளிப் பதக்கப் பரிசும் பெற்றிருக்கின்றன. நமது தொழிற்சாலையில் செய்யப்படும் டிரங்குகளின் வேலைப்பாட்டையும் அழுத்தத்தையும் பற்றி யாவரும் மெச்சிப் பேசியிருக்கிறார். ஆர்டர்கள் கொடுத்தாலும் செய்து தருகிறோம். ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள்.

(கேட்லாக்குக்கு எழுதுங்கள்)

நாகப்பட்டணம் சுதேசி ஸ்டீல் டிரங்கு கம்பெனி, **Estd. 1906.**

தஞ்சாவூர்.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.